Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 37
கதிர் : 92

சனிக்கிழமை
26 பெப்ரவரி 2022

மாசி 14 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2053

பக்கங்கள்: 16

விலை: 30/=

**கொரோனா**

| | |
|---|---|
| நேற்று | 1,286 |
| மொத்தம் | 6,43,072 |

**உயிரிழப்பு**

| | |
|---|---|
| நேற்று | 26 |
| மொத்தம் | 16,142 |



முச்சந்தி முனி

"இப்ப சாத்தான் எல்லாம் வேதம் ஓதுற காலம் .இப்பிடியான கறுமங்களை கேக்க வேண்டியது எங்கட தலைவிதி கண்டியளோ"



ரஷ்யத் தாக்குதல்

# உக்ரைனில் உச்சம்!

## தலைநகர் கீவ் சுற்றிவளைப்பு

மொஸ்கோ, பெப்ரவரி 26

ரஷ்யாவுக்கும் உக்ரைனுக்கும் இடையே போர் மூண்டுள்ள நிலையில், உக்ரைனின் தலைநகர் கீவ், ரஷ்யாவால் சுற்றிவளைக்கப்பட்டுள்ளது. உக்ரைன் தாக்குதலை நிறுத்தி சரணடைவதை அறிவித்தால் பேச்சுக் குறித்துப் பரிசீலிக்கப்படும் என்று ரஷ்ய அதிபர் புடின் அறிவித்துள்ளார்.

15

## டிப்பர் மோதி இறந்தவருக்கு கொரோனா!

பளை, பெப். 26

டிப்பர் மோதி உயிரிழந்த குடும்பத் தலைவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

15

## ஆணின் சடலம் பளையில் மீட்பு

கிளிநொச்சி, பெப். 26

பளை பொலிஸ்பிரிவுக்குட்பட்ட பளை நகரப் பகுதி ஏ9 வீதியில் ஆணொருவரின் சடலம் நேற்று மீட்கப்பட்டுள்ளது. பளை முல்லையடியைச்

15

## இளவாலையில் திருட்டு சந்தேகநபர் கைதானார்

யாழ்ப்பாணம், பெப். 26

இளவாலை பொலிஸ் பிரிவில், வீட்டிலுள்ள

15

## வடக்கில் புதனன்று மழைக்கு வாய்ப்பு!

யாழ்ப்பாணம், பெப். 26

நாளை ஞாயிற்றுக்கிழமை பிற்பகலுக்குப் பின்னர் தென் கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாக வாய்ப்புள்ளது. இதனால் எதிர்வரும்

15

பிரச்சினைக்கு போர் தீர்வாகாது!

## ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தில் இலங்கை மதில்மேல் பூனை

கொழும்பு, பெப். 26

'பிரச்சினைகளை பேச்சுமூலம் தீர்த்துக்கொள்ள வேண்டும் என்பதே எமது நிலைப்பாடு. பிரச்சினைக்கு போர் என்பது தீர்வாக அமையாது. உக்ரைன், ரஷ்யா விவகாரத்தில் எந்தவொரு பக்கத்துக்காகவும் கதைக்கமுடியாது'

15

யாழ்ப்பாணம் மாவட்ட

## ஒருங்கிணைப்புக் குழுவுக்கு எதிராகப் போராடத் தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப். 26

யாழ்ப்பாண மாவட்ட ஒருங்கிணைப்பு குழுவின் செயற்பாடுகள் எல்லை மீறிச் செல்வதைத் தடுக்கவும் மக்களின் நலன்கள் அனைத்தும் மக்களின் விருப்புக்கமைவான தெரிவுகளாக இருக்க வேண்டும்

15

## கொலைகளில் தமக்கு நம்பிக்கையில்லையாம்

ஈ.பி.டி.பி. அறிக்கை

யாழ்ப்பாணம், பெப். 26

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் ஒரு போதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை.

15



## பெற்றோல் தட்டுப்பாட்டால் திண்டாடும் பொதுமக்கள்!

மன்னார், பெப். 26

நாட்டில் ஏற்பட்டுள்ள பெற்றோல் தட்டுப்பாட்டால் மன்னாரில் மக்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றோல் இன்மையால் வாகன உரிமையாளர்கள் மற்றும் பொதுமக்கள் திருப்பி அனுப்பப்பட்டமையைக் காணமுடிந்தது.

இதேவேளை வவுனியா

15

## ஆளுநரின் வாக்குறுதியால் கைவிடப்பட்டது போராட்டம்!

யாழ்ப்பாணம், பெப். 26

அரசியல் கைதிகளை விடுவிக்கக்கோரி வடக்கு மாகாண ஆளுநர் செயலகத்துக்குமுன்பாகமுன்னெடுக்கப்பட்டுவந்த போராட்டம், ஆளுநரின் வாக்குறுதியை அடுத்துக் கைவிடப்பட்டது.

நேற்று மாலை போராட்டத்தில் ஈடுபட்ட உறவுகளுக்கும் ஆளுநருக்கும் இடையில் கலந்துரையாடல் இடம்பெற்றது. இதன்போது சிறைச்சாலை


12



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவை இலங்கை ஆதரிக்கக்கூடாது

## ஐரோப்பிய ஒன்றியம் வலியுறுத்து



**கொழும்பு,பெப்.26**

**உக்ரைனுக்கு எதிரான ரஷ்யாவின் சட்ட விரோத நடவடிக்கையை ஆதரிக்க வேண்டாம் என்று ஐரோப்பிய ஒன்றியம் இலங்கையை வலியுறுத்தியுள்ளது.**

பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, நெதர்லாந்து மற்றும் ரோமானியா ஆகிய நாடுகளின் தூதரகங்களின் இணக்கப்பாட்டுடன், இலங்கை மற்றும் மாலைதீவுக்கான ஐரோப்பிய ஒன்றிய பிரதிநிதிகளால் வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது, உக்ரைன் மீது ரஷ்யா மேற்கொண்டுள்ள நடவடிக்கை ஐக்கிய நாடுகள் சபையின் சர்வதேச உடன்படிக்கைகளை முற்று முழுதாக மீறும் செயலாகும்.

எந்தவொரு நாட்டினதும் இறையாண்மை அல்லது அரசியல் சுதந்திரத்துக்கு எதிராகப் படையெடுப்பை மேற்கொள்வதோ அல்லது அச்சுறுத்தலைப் பிரயோகிப்பதோ தடை செய்யப்பட்டுள்ளது.

தற்போதைய நெருக்கடிக்கான அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கு நாம் பல வருடகாலமாக முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றோம். நேட்டோ அமைப்பின் ஊடாக பேச்சுக்களை முன்னெடுப்பதற்கு விடுக்கப்பட்ட அழைப்பை ரஷ்யா ஏற்றுக்கொள்ளாமை கவலையளிக்கின்றது.

ரஷ்யா உக்ரைனின் இறையாண்மையைப் புறக்கணிப்பதுடன், அதன் இருப்புக்கான உரிமையையும் கேள்விக்குட்படுத்துகின்றது. இந்த நடவடிக்கையானது, சர்வதேச சட்டங்களுக்கு அமைவான ஒழுங்குகளுக்கு தீவிர அச்சுறுத்தலை ஏற்படுத்தியுள்ளது. ஒட்டுமொத்த உலகத்தின் அமைதிக்கும், பாதுகாப்புக்கும் அச்சுறுத்தலை ஏற்படுத்தியிருக்கக்கூடிய இந்த மிகமோசமான நடவடிக்கையை உடனடியாக முடிவுக்குக் கொண்டுவருமாறு சர்வதேச சமூகம் ரஷ்யாவை வலியுறுத்த வேண்டும்- என்றுள்ளது. (ஒ-4,இ)

## தாதியர் சங்கம் மீதான தடையுத்தரவு நீடிப்பு

கொழும்பு,பெப்.26

தொழிற்சங்க நடவடிக்கைகளை இடைநிறுத்துமாறு, அரச தாதியர் சங்கம் மீது கொழும்பு மாவட்ட நீதிவானால், விதிக்கப்பட்டிருந்த தடை உத்தரவு மேலும் நீடிக்கப்பட்டுள்ளது.

அரச தாதியர் சங்கம் மேற்கொண்டிருந்த பணிப்புறக்கணிப்பைத் தொடர்ந்து முன்னெடுப்பதைத் தடுக்கும் வகையில், கடந்த 10 ஆம் திகதி நீதிமன்றம் இடைக்கால தடை உத்தரவு பிறப்பித்தது.

அரச தாதியர் சங்கம் மற்றும் அதன் தலைவர் சமன் ரத்னபிரிய ஆகியோருக்கு எதிராக, சட்டமா அதிபர் வழக்குத் தாக்கல் செய்திருந்தார். சட்டமா அதிபர் திணைக்களம் நீதிமன்றில் முன்வைத்த விடயங்களை ஆராய்ந்த, கொழும்பு மாவட்ட நீதிவான் அருண அளுத்கே இடைக்கால தடையுத்தரவைப் பிறப்பித்திருந்தார்.

இந்த வழக்கு மீண்டும் விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, எதிர்வரும் மார்ச் 11 ஆம் திகதி வரை தடை உத்தரவு நீடிக்கப்பட்டுள்ளது. (ஒ-4,இ)



## நல்லூர் தோரணவாயிலின் புனருத்தாரணப் பணி ஆரம்பம்

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்ப்பாண இராசதானியின் மரபுரிமை மையமாக காணப்படும் தோரணவாயில் மீள் புனருத்தாரனப் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதற்கான அடிக்கல் நடுகை விழா நல்லூரில் அமைந்துள்ள தோரணவாயில் வளாகத்தில் நேற்று இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் யாழ். மாநகர முதல்வர் மணிவண்ணன், நல்லூர் பிரதேச சபைத் தவிசாளர் மயூரன், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் ஓய்வுநிலைப் பேராசிரியரும் யாழ்ப்பாண மரபுரிமை மையத்தின் தலைவருமான பேராசிரியர் பரமு. புஷ்பரட்ணம், தொல்லியல் திணைக்கள யாழ்., கிளிநொச்சி மாவட்ட உதவிப் பணிப்பாளர் நளின் வீரரட்ண, யாழ்மாவட்ட தொல்லியல் திணைக்கள அதிகாரி பா.கபிலன், யாழ். மாநகரசபை உறுப்பினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர். (வ-125)

## 12 இந்திய மீனவர்களையும் மன்றில் முற்படுத்த பணிப்பு

கிளிநொச்சி,பெப்.26

இரணைதீவுக் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 12 இந்திய மீனவர்களையும் எதிர்வரும் திங்கட்கிழமை மன்றில் முன்னிலைப்படுத்துமாறு கிளிநொச்சி மாவட்ட நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டது.

இரணைதீவுக் கடற்பரப்பில் கடந்த 13 ஆம் திகதி மீன்பிடித்துக் கொண்டிருந்த 12 இந்திய மீனவர்களை கடற்படையினர் கைது செய்தனர். அவர்களின் இரண்டு படகுகளும் கைப்பற்றப்பட்டன. மீனவர்கள் சான்றுப் பொருள்களுடன், கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்திடம் ஒப்படைக்கப்பட்டனர்.

மீனவர்கள் நீதிமன்றில் முற்படுத்தப்பட்டு, நேற்று வரை விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

குறித்த வழக்கு நேற்று விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது. எதிர்வரும் திங்கட்கிழமை மீனவர்களை மன்றில் முன்னிலைப்படுத்துவதுடன், இரண்டு வழக்குகளுக்கும் குற்றச்சாட்டுப் பத்திரங்களைத் தாக்கல் செய்யுமாறும் நீதிமன்று கட்டளையிட்டது. (ஒ-4-113)




## ரஷ்யத் தூதரகத்துக்கு முன் உக்ரைனியர் போராட்டம்

கொழும்பு, பெப்.26

உக்ரைன் மீதான ஆக்கிரமிப்பை ரஷ்யா நிறுத்த வேண்டும் என்று வலியுறுத்தி, இலங்கைக்கு வருகை தந்துள்ள உக்ரைன் சுற்றுலாப் பயணிகள், கொழும்பில் உள்ள ரஷ்யத் தூதரகத்துக்கு முன்பாக நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர். ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புடினுக்கு எதிராக பல்வேறு வாசகங்கள் எழுதிய பதாகைகளை ஏந்தியவாறு அவர்கள் தமது எதிர்ப்பை வெளியிட்டனர். (ஒ-4-இ)

## பத்தல மின்முனையம் நேற்றுடன் செயலிழப்பு

கொழும்பு,பெப்.26

எரிபொருள் நெருக்கடியால், கொழும்பு துறைமுக பத்தல மின்முனைய உலை நேற்று மதியத்துடன் செயலிழந்துள்ளது என்று மின்சார சபைப் பேச்சாளர் அண்ட்ரூ நவமணி தெரிவித்துள்ளார். ஏற்கனவே களனிதிஸ்ஸ ஒருங்கிணைந்த சுழற்சி மின் மையம் மற்றும் களனிதிஸ்ஸ மின்னுற்பத்தி நிலையம், மத்துகம மின்னுற்பத்தி நிலையம், துல்கிரிய மின்னுற்பத்தி நிலையம் மற்றும் கெரவலப்பிட்டி மேற்கு முனைய மின்னுற்பத்தி நிலையம் என்பன எரிபொருள் இன்மையால் செயலிழந்துள்ளன. இதனால் மின்சார விநியோகத்துக்குப் பெரும் பாதிப்பு ஏற்படும் என்று மின்சார சபை தெரிவித்துள்ளது.

மின்சார சபைக்கு எரிபொருளை வழங்குவோம் என்று சில அதிகாரிகள் அறிவிப்புக்களை வெளியிட்டுள்ள போதிலும். இதுவரையில் அவசியமான எரிபொருள் கிடைக்கப்பெறவில்லை என்று சபையின் பேச்சாளர் அண்ட்ரூ நவமணி மேலும் தெரிவித்துள்ளார். (ஒ-4-இ)

# இலங்கையில் மட்டுமா மனித உரிமை மீறல்கள்?

## கொலம்பகே ஆதங்கம்

கொழும்பு,பெப்.26

இலங்கையில் மட்டும் மனித உரிமை மீறல்கள் இடம்பெறவில்லை. இலங்கை மீது குற்றம் சுமத்தும் பல நாடுகள், கடந்த காலங்களில் மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டுள்ளன என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் ஜெயநாத் கொலம்பகே தெரிவித்துள்ளார். ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது கூட்டத்தொடருக்கான, இலங்கையின் தயார்ப்படுத்தல் [illegible] நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதனையும் செயற்படுத்த வேண்டும் என்று எந்தவொரு அரசும் எமக்கு அழுத்தம் கொடுக்கத் தேவையில்லை. அரசால் ஆற்றப்படும் நல்ல விடயங்களை ஏற்று, அதற்கு ஒத்துழைப்பு வழங்குவதையே அவர்கள் செய்ய வேண்டும்.

போர் காரணமாக, மாதமொன்றுக்கு அனைத்து இனங்களையும் சேர்ந்த சுமார் 250 உயிர்கள் பலியாகின.

2009 ஆம் ஆண்டு மே மாதம் 19 ஆம் திகதியின் பின்னர், ஏப்ரல் 21 தாக்குதலைத் தவிர்த்து, உயிர்கள் பலியான சந்தர்ப்பம் பூச்சியமாகும்.

மனித உரிமைகள் குறித்து பேசுவதற்கு முன்னர், மனிதன் ஒருவன் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது முக்கியம்.

இலங்கை மீது குற்றம் சுமத்தும் நாடுகளின், கடந்த இரண்டு தசாப்தகால செயற்பாடுகளைப் பார்த்தால், அவை மனித உரிமைகளை மீறி, வேறு நாடுகளை ஆக்கிரமித்து, அந்த நாடுகளில் பெருமளவான உயிரிழப்புகளை ஏற்படுத்தியுள்ளன- என்றார். (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத தடைச் சட்டத்தை முற்றாக நீக்க வேண்டும்

## யாழ்.மாநகர சபையில் தீர்மானம்

**யாழ்ப்பாணம்,பெப்.26**

**மக்களின் உரிமைகளை, சுதந்திரத்தை, நிம்மதியான வாழ்வைப் பேணிப் பாதுகாக்க, நாட்டில் தற்போது நடைமுறையில் உள்ள பயங்கரவாதத் தடைச்சட்டம் நீக்கப்படவேண்டும் என்று யாழ்.மாநகர சபையில் பிரேரணை முன்வைக்கப்பட்டு சபையில் தீர்மானமாக நிறை வேற்றப்பட்டது.**

யாழ்ப்பாணம் மாநகர சபையின் சபை அமர்வு, மாநகர முதல்வர் வி.மணிவண்ணன் தலைமை யில் நேற்று முன்தினம், இடம் பெற்றது இதன்போதே இத் தீர் மானம் நிறைவேற்றப்பட்டது.

இன்று எம் நாட்டினதும் உலகத்தி னதும் பேசுபொருளாக இருப்பது நாட்டின் பயங்கரவாதத் தடைச் சட்டம். எனவே இதனை முற்றாக நீக்க வேண்டும். இந்தத் தீர்மா னத்தை ஜனாதிபதி, பிரதமர், நீதி அமைச்சர் ஆகியோருக்கு அனுப்ப வேண்டும் என்ற கோரிக் கையுடன் தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பின் மாநகர சபை உறுப்பி னர் சொலமன் சூ. சிறில் பிரேர ணையை முன்மொழிந்தார். இதன்போது வாதப் பிரதி வாதங் கள் இடம்பெற்றன. தொடர்ந்து பிரேரணையை சபை ஏற்றுக் கொண்டு தீர்மானமாக நிறைவேற் றியது. (ஓ-4,17,இ)

## தமிழ் மொழியை நீக்கியது தேசியத் தொலைக்காட்சி

கொழும்பு, பெப்.26

இலங்கையின் தேசியத் தொலைக்காட்சியான ரூபவாஹினியின் உத்தியோகபூர்வ இலச்சினை யிலிருந்து தமிழ் மொழி நீக்கப்பட்டுள்ளது.

சுமார் நான்கு தசாப்தங்களாக ரூபவாஹி னியின் உத்தியோகபூர்வ இலச்சினை சிங்களம், தமிழ், ஆங்கிலம் என மும்மொழிகளையும் உள்ளடக்கியிருந்தது. இந்த நிலையில் அண் மையில் மாற்றப்பட்ட ரூபவாஹினியின் புதிய இலச்சினை சிங்கள மொழியில் மட்டும் அமைந் துள்ளது. இதேவேளை ரூபவாஹி னியின் புதிய தலைவராக சோனல குணவர்த்தன அண்மை யில் நியமிக்கப்பட்டிருந்தார் என்பது குறிப்பி டத்தக்கது. (வ-இ)






## கரையொதுங்கியது மிதக்கும் படகு

யாழ்ப்பாணம்,பெப்.26

வல்வெட்டித்துறை பொலிகண்டிப் பகுதியில், மிதக் கும் படகொன்று நேற்றுக் கரையொதுங்கியுள் ளது. பொலிகண்டி குழந்தை இயேசு தேவாலயத் தின் முன்பாக 30 வெற்றுப் பீப்பாய்கள் பொருத் தப்பட்ட 20 அடி நீளமும் 18 அடி அகலமும் கொண்ட மேடையொன்றே இவ்வாறு கரையொ துங்கியுள்ளது.

சம்பவ இடத்துக்கு விரைந்த வல்வெட்டித்துறைப் பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ள னர். (ஓ-4,125)

# ஐ.நா.அமர்வில் பிரான்ஸின் ஒத்துழைப்பைக் கோரும் இலங்கை

கொழும்பு,பெப்.26

மனித உரிமைகள் பேரவையின் 49 ஆவது அமர்வில், பிரான் ஸின் ஒத்துழைப்பை எதிர்பார்த் துள்ளோம் என்று வெளிநாட்டு அமைச்சர் பேராசிரியர் ஜி.எல். பீரிஸ் தெரிவித்தார்.

பிரான்ஸ் இலங்கை நட்புறவுக் குழுவின் தலைவர் மற்றும் உறுப் பினர்களுடனான சந்திப்பில் கலந்துகொண்ட அமைச்சர், ஐரோப்பிய ஒன்றியத்துக்கு பிரான்ஸ் தலைமை தாங்கும் பின் னணியில், இலங்கை மீது செலுத் தப்படுகின்ற நீடித்த அக்கறைக் காக பிரான்ஸ் செனட்டர்களுக்கு நன்றி தெரிவித்தார்.

நாட்டின் பொருளாதாரத்தில் கொரோனாவின் பாதகமான தாக் கம் தொடர்பாக இலங்கையின் தற்போதைய சவால்கள் குறித்து விளக்கினார். நாடு தற்போது படிப்படியாக மீண்டு வருவதுடன், பொருளாதார நிறுவனங்களின் நிலையான மறுமலர்ச்சியையும் காண்கின்றது என்றும் தெரிவித் தார்.

காணாமல் ஆக்கப்பட்டவர்களுக் கான அலுவலகம், இழப்பீடுகளுக் கான அலுவலகம், தேசிய ஒரு மைப்பாடு மற்றும் நல்லிணக்கத் துக்கான அலுவலகம் மற்றும் இலங்கை மனித உரிமைகள் பேரவை போன்ற சுயாதீன பொறிமுறைகளின் முன்னேற்றங் கள் குறித்தும் கருத்துத் தெரிவித் தார்.

நாடாளுமன்றத்தில் முன்வைக் கப்பட்ட பயங்கரவாதத் தடைச்சட் டத்துக்கான திருத்தங்களுக்கு அரசால் முன்மொழியப்பட்ட திருத் தங்கள் மார்ச் முதல் வாரத்தில் விவாதிக்கப்படும் என்றும் தெரி வித்தார்.

தொடர்ந்து பொருளாதாரம், துறை முக நகருக்கு பொருந்தக்கூடிய முதலீட்டு நடைமுறைகள், நாட் டின் சுகாதாரம் மற்றும் கல்வி முறைகள், தொழிலாளர் விவகா ரங்கள், பாலின முன்முயற்சிகள் மற்றும் வெளியுறவுக் கொள்கை உள்ளிட்ட விடயங்கள் தொடர்பான பல்வேறு விடயங்கள் கலந்து ரையாடப்பட்டன. (ஓ-4,இ)




**சோழியன் குடுமி சும்மா ஆடாது எண்டுறவை. அது மெய்தான் பாருங்கோ. இப்ப ஒரு அமைச்சருக்கு தான் போய் வார இடமெல்லாம் சுப்பர்மடம் மீனவர்களை கேவலப்படுத்துறது வாடிக்கையாப் போச்சுது. அதோட அங்கத்தை மீனவர் சமாசத்தைக் கலைச்சு, தனக்கு வேண்டிய ஆக்களை போடவும் அவர் வெளிக்கிட்டவர். ஆனால் சட்டத்துக்கு அது பிழையெண்டதால அவர் அதை எழுத்து மூலமா இன்னமும் அறிவிக்கேலை. அப்பிடி அறிவிச்சால் உடன வழக்குப் போடுறதெண்டு இப்ப மீனவர் சமாசத்தில இருக்கிறவையும் ரெடியாத்தான் இருக்கினம்.**

**இந்திய மீனவர்களுக்கு எதிரா போராட்டம் நடத்தேக்குள்ள அவையோட பேச்சுவார்த்தை நடத்தப் போன இடத்தில தன்னை மீனவர்கள் மதிக்காமல் கதைச்சுப் போட்டினம் எண்ட கோபத்திலதான் சமாச த்தில இருக்கிறவையை அமைச்சர் மாத்த வெளிக்கிடுறார் எண்டு நீங்கள் நினைச்சியள் எண்டால் அது கடும் பிழை கண்டியளோ. உண்மையில இதுக்குக் காரணமே வேற. வடமராட்சிப் பக்க கடலில கடலட்டை பிடிபடுறது கூட. ஆனால் அந்தத் தொழிலை அங்கத்தை மீனவர்கள் செய்யிறேலை. ஆனால் கடலட்டை பிடிக்கிறதிலை தென்னிலங்கைக்காரர் கரைகண்ட ஆக்கள். போனமுறையும் இப்பிடி வடமராட்சிக் கடற்கரையிலை தங்கி நிண்டு கடலட்டை பிடிச்சவை. ஆனால் அதுக்கு அந்தப் பகுதிச் சனங்களும் ம க்களும் கடும் எதிர்ப்புத் தெரிவிச்சவை.**

**இந்த முறையும் அதேமா திரி கடலட்டை பிடிக்கிறதுக்கு அமை ச்சர் 50 தென்னிலங்கைக்காரருக்கு அனுமதி குடுத்திட்டாராம். ஆனால், இப்ப மீனவர்கள் இருக்கிற கடுப்பில கடலட்டை பிடிக்கிறவை வந்தால் கட்டாயம் பெரிய பிரகண்டம் நடக்கும். அதுவும் இப்ப சமாசத்தில இருக்கிறவை கடலட்டைக் காரர் கால்வைக்கவே விட மாட்டினம். அதாலதான் சமாசத்திலை இருக்கிறவையை நிப்பாட்டிப்போட்டு தன்ர ஆக்களைப் போட்டால் பிரச்சினை இல்லாமல் கடலட்டைக்காரர் தங்கிநிண்டு தொழில்செய்யலாம் எண்டதுதான் அமைச்சரின்ர திட்டமெண்டு வடமராட்சி மீனவர்மார் கதைக்கினம்.**

- பசி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்து சமய நூல்களின் விற்பனைக் கண்காட்சி

யாழ்ப்பாணம்,பெப்.26

**சைவ பாரம்பரிய மரபுரிமை நூல்களின் விற்பனைக்கண்காட்சி, யாழ் நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் நேற்று ஆரம்பமானது.**



நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ தேசிய ஞானசம்பந்த பரமாச்சரிய சுவாமிகள், யாழ் துர்க்காதேவி தேவஸ்தான தலைவர் கலாநிதி ஆறு. திருமுருகன், யாழ் மாவட்ட மேலதிக செயலர் ம.பிரதீபன், நல்லூர் பிரதேச செயலாளர் திருமதி. எழிலரசி ஆகியோர் நிகழ்வை ஆரம்பித்து வைத்தனர்.

சுமார் ஆயிரத்துக்கும் மேற்பட்ட நூல்கள் இங்கு காட்சிப்படுத்தப்பட்டுள்ளன.

இந்து சமய, கலாசார அலுவல்கள் திணைக்களத்தின் எற்பாட்டில் நடைபெறும் இந்தக் கண்காட்சி நாளையும் இடம்பெறும்.

(ஒ-4-125)

# 5 ஆண்டுகள் கடந்த போதும் பிள்ளைகளுக்காக வீதியில்

## உறவுகள் ஆதங்கம்

**"தமிழர் தாயகத்தில் நாங்கள் மட்டும் தான் வீதியில் கொட்டகை அமைத்து போராடி வருகின்றோம். கிளிநொச்சி மற்றும் பிற இடங்களில் உள்ளவர்களையும் ஊக்குவிக்கிறோம். தமிழ் மக்களின் உதவியின்றி நாம் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்திருக்க முடியாது"**

வவுனியா, பெப்.26

கடந்த 5 ஆண்டுகளாக உறவுகளுக்காக தெருவோரம் நாம் போராடுகின்றோம். ஆனால் எமக்கான தீர்வு உள்நாட்டிலும், சர்வதேசத்திலும் இல்லை என்று காணாமல் ஆக்கப்பட்டவர்களின் உறவினர்கள் கவலை வெளியிட்டனர்.

வவுனியாவில் போராட்டத்தில் ஈடுபட்டு வரும் உறவினர்கள், 5 வருடங்கள் பூர்த்தியை முன்னிட்டு நேற்று முன்தினம் தமது கவனவீர்ப்பை வெளிப்படுத்தினர். காணாமல் ஆக்கப்பட்ட தங்களின் உறவுகளின் படங்களை ஏந்தியவாறும், அமெரிக்க மற்றும் ஐரோப்பிய ஒன்றியக் கொடிகளை ஏந்தியவாறும் அவர்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

"தமிழர் தாயகத்தில் நாங்கள் மட்டும் தான் வீதியில் கொட்டகை அமைத்து போராடி வருகின்றோம். கிளிநொச்சி மற்றும் பிற இடங்களில் உள்ளவர்களையும் ஊக்குவிக்கிறோம். தமிழ் மக்களின் உதவியின்றி நாம் இந்தப் போராட்டத்தைத் தொடர்ந்திருக்க முடியாது" என்று போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.

(ஒ-4-110)

# குப்பை கொட்டுவோருக்கு எதிராக சட்ட நடவடிக்கை

## வேலணைப் பிரதேசசபை தீர்மானம்

யாழ்ப்பாணம், பெப்.26

வேலணைப் பிரதேச சபையின் ஆளுகைக்குட்பட்ட பொது இடங்கள் மற்றும் வீதிகளில் குப்பை கொட்டுபவர்களை சட்டத்தின் முன் நிறுத்துவதற்கு சபை நடவடிக்கை எடுத்துள்ளது என தவிசாளர் நமசிவாயம் கருணாகரகுருமூர்த்தி தெரிவித்துள்ளார்.

வேலணைப் பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் தலைமையில் நேற்று முன்தினம் நடைபெற்றது. அமர்வில் சுற்றுச் சூழல் சார்ந்த விடயங்கள் தொடர்பில் உறுப்பினர்களால் கருத்துரைக்கப்பட்டது. இதன்போதே தவிசாளர் இவ்வாறு தெரிவித்தார்.

குப்பை கொட்டுவதைக் கட்டுப்படுத்துவதற்கு பிரதேச சபையால் பொறிமுறை உருவாக்கப்பட்டுள்ளது எனத் தெரிவித்த அவர், குப்பை கொட்டும் நபர்களை இனங்கண்டு சட்டத்தின் முன் நிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்தார்.

(வ-20)

# சட்ட விரோத செயற்பாடுகள்; 9 பேர் புதுக்குடியிருப்பில் கைது

புதுக்குடியிருப்பு, பெப்.26

புதுக்குடியிருப்புப் பிரதேசத்தின் சில இடங்களில் வெவ்வேறு குற்றச்சாட்டுக்களின் கீழ் 9பேர் புதுக்குடியிருப்பு பொலிஸாரால் கடந்த புதன்கிழமை கைது செய்யப்பட்டுள்ளனர்.

மன்னாகண்டல் பகுதியில் அனுமதியின்றி கிரவல் அகழ்வில் ஈடுபட்டனர் என்ற குற்றச்சாட்டில் மூவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். புதுக்குடியிருப்பு - பரந்தன் வீதியில் மேற்கொள்ளப்பட்ட வீதிச்சோதனை நடவடிக்கையின் போது முறைகேடான அனுமதிப்பத்திரத்தைப் பயன்படுத்தி மணல் ஏற்றிச் சென்ற நான்கு டிப்பர்களும் அதன் சாரதிகளும் கைதுசெய்யப்பட்டனர்.

தேவிபுரம் ஆற்றுப்பகுதியில் கசிப்புக் காய்ச்சும் இடமொன்று சுற்றிவளைக்கப்பட்டு இருவர் கைதுசெய்யப்பட்டனர்.

சந்தேக நபர்கள் 9பேரும் பொலிஸ் பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளனர் என்றும் அவர்களை 28ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்றும் புதுக்குடியிருப்பு பொலிஸார் தெரிவித்தனர்.

(வ-19)

# வவுனியாவில் நடமாடும் சேவை

வவுனியா,பெப். 26

வவுனியா பிரதேச செயலகத்துக்குட்பட்ட மக்களுக்கான நடமாடும் சேவை, வவுனியா காமினி மகா வித்தியாலயத்தில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது.

வடமாகாணத்துக்குட்பட்ட காணித் திணைக்களம், போக்குவரத்துத் திணைக்களம், விவசாய அமைச்சு, கல்வி அமைச்சு, ஆட்பதிவுத் திணைக்களம், சுகாதார திணைக்களம், உள்ளூராட்சி அமைச்சு, நீர்ப்பாசன திணைக்களம், பிறப்பு இறப்பு விவாகப் பதிவு திணைக் களம், கால்நடை உற்பத்தி, மாகாணப் பொதுச் சேவை ஆணைக்குழு ஆகிய திணைக்களங்கள் இந்த நடமாடும் சேவையில் பங்கேற்றன.

(ஒ-ரி1-18)



# யாழ்.இந்துவின் சாரணர்கள் ஐவருக்கு ஜனாதிபதி விருது

யாழ்ப்பாணம்,பெப்.26

யாழ்.இந்துக்கல்லூரியின் சாரணர்கள் ஐவர், ஜனாதிபதி சாரண விருதைப் பெற்றுள்ளனர்.

ஒவ்வொரு மாவட்டத்திலிருந்தும் தெரிவு செய்யப்பட்ட வெற்றியாளர்களுக்கு, கடந்த புதன்கிழமை ஜனாதிபதியால் விருது வழங்கப்பட்டது. இதில் யாழ்.இந்துவின் சாரணர் ப.கோபிராம் நேரடியாக விருதைப் பெற்றார்.

தொடர்ந்து 9 மாகாணங்களிலும் விருது வழங்கப்பட்டது. யாழ்.மாவட்டச் செயலகத்தில் நடைபெற்ற, வடமாகாணத்துக்கான விருது வழங்கல் நிகழ்வில், யாழ்.இந்து சாரணர்களான சா.டினுசாந்தன், ர.நிமல், சி.பிரணவன், து.சிவசங்கர் ஆகியோர் விருதைப் பெற்றுக் கொண்டனர்.

(ஒ-4-இ)

# பயங்கரவாதத் தடைச் சட்டத்தை நீக்கக் கோரி தொடரும் கையெழுத்து



யாழ்ப்பாணம்,பெப்.26

பயங்கரவாதத் தடைச் சட்டத்தை முற்றாக நிராகரிக்கக் கோரி, தொடர்ச்சியாக கையெழுத்துக்கள் பெறப்படுகின்றன.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின், மானிப்பாய் பொதுச் சந்தையின் முன்பாக நேற்று கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

பொதுமக்கள் ஆர்வத்துடன் தமது கையெழுத்துக்களைப் பதிவு செய்தனர்.

வலிகாமம் தென்மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் அ.ஜெபநேசன் மற்றும் பிரதேச சபை உறுப்பினர்களும் தமது கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.

தொடர்ந்து சங்கானை பேருந்து நிலையத்துக்கு முன்பாக நேற்றுக் கையெழுத்துக்கள் பெறப்பட்டன.

வலி. மேற்குப் பிரதேச சபையின் தவிசாளர் த.தர்மலிங்கம் நடனேந்திரன் மற்றும் உறுப்பினர்கள், பொதுமக்கள் தமது கையெழுத்துக்களை பதிவு செய்தனர்.

பயங்கரவாதத் தடைச் சட்டம் தொடர்பான விழிப்புணர்வுத் துண்டுப்பிரசுரமும் மக்களுக்கு விநியோகிக்கப்பட்டது.

தமிழரசுக் கட்சியின் வாலிபர் முன்னணி இதனை ஏற்பாடு செய்துள்ளது.

(ஒ-4-125-27)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக் கருத்தமர்வு

யாழ்ப்பாணம், பெப். 26
வடக்கு மாகாண இளைஞர் விவகார அலகின் ஏற்பாட்டில், வாராந்தம் பிரதி சனிக்கிழமை தோறும் இரவு 7 மணி தொடக்கம் 9 மணி வரை இடம் பெற்றுவரும் "யாவர்க்கும் நலம்" எனும் நிகழ்ச்சித் தொடரின் இந்த வாரக் கருத்தமர்வு, இன்று "பெருந்தொற்றுக் காலத்துக்குப் பின்னரான கண் ஆரோக்கியம்" எனும் தலைப்பில் இடம்பெறவுள்ளது.

கருத்தமர்வில், சூம் செயலி இலக்கம் 899 8528 2023, கடவுச்சொல் 354485 என்பவற்றினூடாக அனைவரையும் கலந்துகொண்டு பயனடையுமாறு வடமாகாணக் கல்வியமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளார். (ஓ-ரி1)

## போதனாசிரியர்பதவிக்கு விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 26
யாழ்.வலயக்கல்வி அலுவலக முறைசாராக் கல்விப்பிரிவின் தையல் பயிற்சிப் போதனாசிரியர்களுக்கான விண்ணப்பங் கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய பயிற்சிக்கு என்.வி.கியூ தொழிற்தகைமை சான்றிதழ்களைப் பெற்றவர்கள் மட்டும் விண்ணப்பிக்க முடியும்.

விண்ணப்பதாரர்கள் சுயமாகத் தயாரித்த விண்ணப்பப்படிவங்களை எதிர்வரும் மார்ச் மாதம் 3ஆம் திகதிக்கு முன்னர் "கல்வி அபிவிருத்திப் பிரிவு வலயக் கல்வி அலுவலகம், செம்மணி வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்" என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது. (ஓ-ரி1)

## பெண்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், பெப்.26
இலங்கை உள்ளூராட்சி மன்றங்களின் சம்மேளனத்தின் ஏற்பாட்டில், 2020 ஆம் ஆண்டு தொடக்கம் செயற்படுத்தப்பட்டு வரும் இணைந்து செயற்படுதல் திட்டத்தின் பெண்களுக்கான இறுதிக் கலந்துரையாடல் எதிர்வரும் 28 ஆம் திகதி திங்கட்கிழமை முற்பகல் 9.30 மணி தொடக்கம் நண்பகல் 12 மணி வரை யாழ் ரில்கோ விருந்தினர் விடுதியில் நடைபெறவுள்ளது.

இதன்போது பெண்கள் சமூகத்தில் காணப்படுகின்ற அடிப்படைப் பிரச்சினைகள் மற்றும் அதனை சமூகம் எவ்வாறு எதிர்கொள்கின்றது போன்ற பிரச்சினைகளைத் தீர்ப்பது தொடர்பில் கலந்துரையாடப்படவுள்ளது. (ஓ-ரி1,9)

# வடக்கு ஆளுநரின் கருத்தால் தீவகத்துக்கே அவமரியாதை

## பிரதேச சபையில் கண்டனம்



**யாழ்ப்பாணம்,பெப்.26**

**யாழ். தீவகப் பெண்கள் சமூகத்துக்கு ஒவ்வாத நடத்தைகளில் ஈடுபட்டுள்ளனர் என்று பொறுப்புள்ள வடக்கு ஆளுநர் கருத்து வெளியிட்டுள்ளமை தீவகத்துக்கு ஏற்படுத்தப்பட்டுள்ள அவமரியாதை. இதனை வன்மையாகக் கண்டித்து வேலணை பிரதேச சபையில் கண்டனத் தீர்மானம் நிறைவேற்றப்பட்டுள்ளது.**

வேலணை பிரதேச சபையின் மாதாந்த அமர்வு நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இதன்போது பிரதேசத்தின் பல்வேறு அபிவிருத்திகள் மற்றும் தேவைப்பாடுகள் தொடர்பில் உறுப்பினர்கள் சுட்டிக்காட்டினர். அவற்றுக்கான தீர்வுகள் குறித்தும் ஆராயப்பட்டன.

இதன்போது சபையின் உறுப்பினர் மேரி மரில்டா, ஆளுநரின் கருத்துத் தொடர்பில் கண்டனத் தீர்மானம் முன்வைத்தார். அதற்கு அனைத்து உறுப்பினர்களும் ஆதரவு தெரிவித்ததுடன், ஆளுநர் மன்னிப்புக் கோர வேண்டும் என்றும் வலியுறுத்தினர். இந்தத் தீர்மானத்தையும் ஏகமனதாக நிறைவேற்றி, ஆளுநருக்கு அனுப்ப நடவடிக்கை எடுக்கப்படும் என்று சபையில் தெரிவிக்கப்பட்டது.

ஆளுநர் பதவியின் பொறுப்பை உணர்ந்து, உண்மையை அறிந்து, சாதக பாதகங்களைக் கருத்தில் கொண்டு கருத்துக்களை வெளியிட்டிருக்க வேண்டும். போர், கொரோனாத் தொற்று என பல காரணங்களால் பெண்களின் வாழ்வு முழுமையாகப் பாதிக்கப்பட்டுள்ளது. பொருளாதாரத்தில் பின்னடைவு, கல்வியில் பின்னடைவு போன்ற பிரச்சினைகள் தீவகத்தில் மட்டுமல்லாது வடக்கின் பல பாகங்களிலும் உள்ளன.

அத்துடன் பெண்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் தீவகத்தில் மட்டுமல்ல நாடு முழுவதிலும் உள்ளன. பெண்களின் பிரச்சினைகளை இனங்கண்டு அவர்களது வாழ்வாதாரத்தைக் கட்டியெழுப்புவதற்கு ஆளுநர் நடவடிக்கை எடுப்பதை விடுத்து,

அரச திணைக்களங்கள் கூறிய தகவலை சமூகப்பொறுப்பற்று வெளியிட்டுள்ளார். இருக்கின்ற பிரச்சினைகளை விடுத்து புதிய பிரச்சினைகளைத் தோற்றுவிக்கும்முகமான கருத்துக்களை ஓர் ஆளுநர் தெரிவித்திருப்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது என்று தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. (ஒ-4,27)

## தொழில் தேடுவோர் விவரங்களை டிஜிற்றல் மயப்படுத்த ஆலோசனை

யாழ்ப்பாணம்,பெப்.26
வடக்கு மாகாணத்தில் தொழில் தேடுபவர்கள் மற்றும் தொழில் வழங்கக் காத்திருப்போர் தொடர்பிலான தகவல்களை டிஜிற்றல் மயப்படுத்த, வடமாகாண ஆளுநர் அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியுள்ளார்.

வவுனியா மாவட்ட தொழில் திணைக்களம் மற்றும் மனிதவலு வேலைவாய்ப்பு உத்தியோகத்தர்களுக்கும், ஆளுநருக்கும் இடையிலான கலந்துரையாடலில் அவர் இந்த ஆலோசனையை முன்வைத்தார்.

வடக்கில் தொழில் வாய்ப்புகளைத் தேடிக் காத்திருக்கும் இளைஞர்களின் விவரங்களை டிஜிற்றல் மயப்படுத்துவதோடு, தொழில் வழங்குநர்களையும் இணைத்து தரவுத் தளம் ஒன்றை உருவாக்குங்கள்.

இவ்வாறான நடைமுறைகளை மாவட்ட ரீதியாக கடமையில் உள்ள உத்தியோகத்தர்கள் நடைமுறைப்படுத்த வேண்டும்.

அதேவேளை ஒவ்வொரு மாவட்டத்திலும் 5 பாடசாலைகள் வீதம் தெரிவு செய்து, தேசிய கைத்தொழில் பயிலுநர் அதிகார சபையால் முன்னெடுக்கப்படுகின்ற பாயிற்சி நெறிகளை குறித்த பாடசாலைகளில் பரீட்சார்த்தமாக நடைமுறைப்படுத்துங்கள்.

வெளிநாடுகளில் வேலை வாய்ப்புத் தேடிச்செல்லும் இளைஞர்களுக்கு உள்நாட்டிலேயே அவர்களின் துறைசார்ந்த துறைகளில் பயிற்சிகளை வழங்கி, அவர்களுக்கான தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொடுக்க வேண்டும்.

சுயதொழில் வாய்ப்புகளை மேற்கொள்பவர்களுக்குத் தேவையான சந்தை வாய்ப்புகளை உள்நாட்டில் உருவாக்கிக் கொடுத்து அவர்களின் உற்பத்திகளுக்கு தேவையான மூலப் பொருள்களைத் தடையின்றி பெற்றுக் கொடுக்க வேண்டும் என்றும் அவர் தெரிவித்தார். (ஓ-4,20,27)

## மன்னார் நகரப் பகுதிகளில் கழிவுத் தொட்டிகள் அமைப்பு

மன்னார், பெப்.26
கழிவுப் பொருள்களை தரம் பிரித்து, சேகரிக்கும் கழிவுத் தொட்டிகள் மன்னார் நகரப் பகுதிகளில் அமைக்கப்பட்டுள்ளன. பழைமையான நகரத் திட்டத்தின் கீழ் மன்னார் நகரை அழகுபடுத்தும் வேலைத்திட்டத்தின் முதல் கட்டமாக இவை அமைக்கப்பட்டன.



இதன் ஆரம்ப நிகழ்வு மன்னார் நகர சபையின் தலைவர் ஞா.அன்ரனி டேவிட்சன் தலைமையில் நேற்று இடம்பெற்றது. மக்கள் கழிவுப் பொருள்களை தரம் பிரித்து குறித்த தொட்டிகளில் போட வேண்டும் என வலியுறுத்தப்பட்டுள்ளது. (வ-56)

## கிளிநொச்சிக் கலைக்கூடம் வேலைத்திட்டங்கள் விரைவு

கொழும்பு,பெப்.26
அகில இலங்கை கம்பன் கழகத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சியில் அமைக்கப்படவுள்ள கலைக்கூடத்தின் வேலைத்திட்டங்கள் விரைவுபடுத்தப்படவுள்ளன.

இதற்காக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தாவை, கம்பவாரிதி இ.ஜெயராஜ் சந்தித்துக் கலந்துரையாடினார். மாளிகாவத்தையில் அமைந்துள்ள கடற்றொழில் அமைச்சில் இந்த சந்திப்பு இடம்பெற்றுள்ளது.

சந்திப்பில் கலைக்கூடத்தின் வேலைத்திட்டங்களை ஜெயராஜ் விவரித்தார். (ஒ-4,27)

## சந்தேகத்துக்கிடமான மோ.சைக்கிள் பொலிஸாரால் கைப்பற்றப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 26
சுன்னாகம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் இரண்டு நாள்களாக சந்தேகத்துக்கிடமான முறையில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த மோட்டார் சைக்கிள் சுன்னாகம் பொலிஸாரால் நேற்று கைப்பற்றப்பட்டது.

ஏழாலை கண்ணகி அம்மன் கோயிலருகில் இரண்டு நாள்களாக அநாதரவாக நின்ற BCB7711 எனும் இலக்கமுடைய மோட்டார் சைக்கிளே இவ்வாறு பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளது. (ஒ-ரி1,125)

## விழிப்புணர்வுக் கலந்துரையாடல்

சாவகச்சேரி, பெப். 26
தேசிய சேமிப்பு வங்கியின் சாவகச்சேரி கிளையின் ஏற்பாட்டில், பன்னாட்டு மகளிர் தினத்தை முன்னிட்டு மாதர் அமைப்புகளுக்கான விழிப்புணர்வுக் கலந்துரையாடல் எதிர்வரும் மார்ச் மாதம் 5 ஆம் திகதி காலை 8 மணிக்கு தென்மராட்சி கலைமன்ற கலாசார மண்டபத்தில் நடைபெறும் என்று கிளை முகாமையாளர் இன்பராஜ் அறிவித்துள்ளார் (ஒ-ரி1,9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொரோனாத் தொற்றிலும் எதிர்க்கட்சிகள் அரசியல்

## கெஹலிய ரம்புக்வெல கூறுகிறார்



**கொழும்பு, பெப்.26**

**தற்போதைய நிர்வாகம் கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்தத் தவறிவிட்டது என்று எதிர்க்கட்சிகள் கூறும் கூற்றுக்களில் அரசியல் அடிப்படை மாத்திரமே உள்ளது என்று சுகாதார அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல தெரிவித்தார்.**

நாடாளுமன்றத்தில் உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது;

தொற்று நோயுடன் அரசியலைக் கலப்பதை ஏற்றுக்கொள்ள முடியாது. எதிர்க்கட்சியினர் தொடர்ந்து பல்வேறு குற்றச்சாட்டுக்களைக்கூறி மக்களை ஏமாற்றி வருகின்றனர். தொற்று நோயைக் கட்டுப்படுத்த அரசாங்கம் செயற்படுத்திய அனைத்துக் கொள்கைகளையும் எதிர்க்கட்சி உறுப்பினர்கள் விமர்சித்து வருகின்றனர்.

நாடு அவசர சுகாதார நிலையைக் கையாளும் போது, எதிர்க்கட்சிகளும், அதன் தலைவர்களும் வெளிப்படுத்தும் கருத்துக்கள் நடைமுறை மற்றும் விவேகத்துடன் இருக்கவேண்டும்.

ஒரு தொற்று நோயின்போது கூட எதிர்க்கட்சிகள் தங்கள் அரசியல் நலன்களை மேம்படுத்துவதிலேயே கவனம் செலுத்துகின்றன. அவர்களுக்கு மக்கள் பதிலளிப்பார்கள் -என்றார். (எ-இ)

## சமகால நிலைவரங்களுடன் வெளியானது 'பஞ்சப்பாட்டு'

யாழ்ப்பாணம்,பெப்.26

இலங்கையில் சமகால மக்கள் நிலைவரங்களை வெளிப்படுத்தி, பூவன் மதீசன் குழுவினரின் பஞ்சப்பாட்டு வெளியிடப்பட்டுள்ளது.

எரிபொருள், மின்சாரம் மற்றும் பொருள்களின் தட்டுப்பாடு உள்ளிட்டவற்றை பாடல் வரிகளில் உள்ளடக்கியுள்ளனர்.

புத்தி கெட்ட மனிதரெல்லாம் திரைப்படக் குழுவினர் பலர் மீண்டும் இந்த பாடலில் நடித்துள்ளனர். (ம-4-26-20)


## தென்மராட்சியில் மேலும் நால்வருக்கு கொரோனா

யாழ்ப்பாணம், பெப். 26

தென்மராட்சியில் நால்வருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

இதன்படி, சங்கத்தானையைச் சேர்ந்த தம்பதியருக்கும், மட்டுவிலில் கடந்த புதன்கிழமை இடம்பெற்ற விபத்தில் காயமடைந்த பெண் அலுவலருக்கும், மட்டுவிலைச் சேர்ந்த ஆண் ஒருவருக்கும் இவ்வாறு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (வ-9)

## நிதி நெருக்கடிக்கு இந்தியா கடனுதவி



கொழும்பு, பெப். 26

நாட்டில் நிலவும் நிதி நெருக்கடியைக் கருத்திற்கொண்டு இந்தியாவிடமிருந்து ஒரு பில்லியன் டொலர் கடனுதவி பெறப்படவுள்ளது.

இது தொடர்பான அனைத்து உடன்படிக்கைகளும் தற்போது இறுதி செய்யப்பட்டுள்ளன என நிதி அமைச்சின் செயலாளர் எஸ்.ஆர்.ஆட்டிகல தெரிவித்துள்ளார். அத்தியாவசிய உணவுப் பொருள்கள் மற்றும் மருந்துகளுக்காக இந்தக் கடனுதவி பெறப்படவுள்ளது என்றும் சில நாள்களில் இந்த உடன்படிக்கைகள் கைச்சாத்திடப்படும் எனவும் அவர் தெரிவித்தார். (வ-இ)

## குழு மோதல் இருவர் காயம்

இளைஞர் குழுக்களுக்கிடையில் ஏற்பட்ட மோதலில் இருவர் காயமடைந்தனர். இந்தச் சம்பவம் வவுனியா, வைரவப்புளியங்குளம் பகுதியில் கடந்த செவ்வாய்க்கிழமை மாலை இடம்பெற்றது. இளைஞர் குழு வீதியில் நின்று அடிதடியில் ஈடுபட்டனர்.

பொல்லுகள், போத்தல்கள், கற்கள் கொண்டு குழுவினர் தாக்குதலில் ஈடுபட்டனர். சம்பவத்தில் இரு இளைஞர்கள் காயமடைந்தனர்.

குழுவினரின் அட்டகாசம் தொடர்பில் வவுனியா பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்பட்டது. பொலிஸார் சம்பவ இடத்துக்கு வருகை தந்து, கைகலப்பில் ஈடுபட்டவர்களை அந்த இடத்தில் இருந்து விரட்டியுள்ளனர். (ஓ-4-18)

## 2025ஆம் ஆண்டுக்குள் அனைவருக்கும் தூய குடிதண்ணீர்

### அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

திருமலை, பெப். 26

நாட்டில் 2025ஆம் ஆண்டுக்குள் சகலருக்கும் தூய குடிதண்ணீர் வழங்கும் வேலைத் திட்டம் முன்னெடுக்கப்படும் என்று நீர் வழங்கல் வடிகாலமைப்பு அமைச்சர் வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

எதிர்காலத் திட்டத்தின் அடிப்படையில் திருகோணமலை மாவட்டத்தில் இதுவரை இணைப்புக்களைப் பெறாத பிரதேசத்துக்கு குடிதண்ணீர் இணைப்பு வழங்கப்படும். தொடர்ச்சியாக தண்ணீரை மக்களுக்கு வழங்கும் வகையிலான முன்மொழிவுகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

நீரின் கொள்ளளவை அதிகரித்தல் மூலமே புதிய பல இணைப்புக்களை வழங்க முடியும். இதற்கான திட்டங்கள் வடிவமைக்கப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இதுவரை நீரிணைப்பு இல்லாது கஷ்டப்படும் பிரதேச மக்களுக்கு குடிதண்ணீர்த் தாங்கிகளை கடன் அடிப்படையில் வழங்குவது தொடர்பில் பரிசீலனை செய்யப்படும். 2025ஆம் ஆண்டளவில் 92 வீதமான பிரதேசங்களுக்கு நீர் வழங்கல் சேவைகளை வழங்க முடியும் - என்றார். (ம-4-இ)

## விருதுகளுக்கான விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், பெப். 26

சர்வதேச மகளிர் தினத்தை முன்னிட்டு, நல்லூர் பிரதேசசபையால் சிறந்த மகளிர் செயற்பாட்டாளர்களுக்கு விருது வழங்குவதற்காக விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

இதற்கமைய சிறந்த பெண் தொழில் முயற்சியாளர் விருது, சிறந்த பெண் சமூக சேவையாளர் விருது, சிறந்த பெண் கலை இலக்கியம் சார் விருது, சிறந்த பெண் கல்வியியலாளர் விருது, சிறந்த பெண் விளையாட்டு வீராங்கனை விருது ஆகியவற்றுக்கு விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன.

பிரதேசசபை எல்லைக்குள் வசிக்கும் தகுதியானவர்கள் இதற்கான விண்ணப்பப்படிவத்தை சபையின் தலைமை அலுவலகத்தில் பெற்று, எதிர்வரும் மார்ச் மாதம் முதலாம் திகதிக்கு முன்னர் தவிசாளர், நல்லூர் பிரதேசசபை, 14/5 கருவப்புலம் வீதி, கொக்குவில் என்ற முகவரிக்கு நேரிலோ அல்லது பதிவுத் தபாலிலோ அனுப்பி வைக்குமாறு அறிவித்துள்ளனர். (ஒ-ரி1)

## உ/த பரீட்சை எழுதிய மாணவர்களுக்கு இரண்டாம் டோஸ்

க.பொ.த. உயர்தரப் பரீட்சை எழுதும் மாணவர்கள் அனைத்துப் பாடங்களதும் பரீட்சைகள் முடிவடைந்த பின் கொரோனாத் தடுப்பூசியின் இரண்டாவது டோஸைப் பெற்றுக்கொள்ளலாம் என சுகாதாரத் துறை அறிவித்துள்ளது.

தற்போது பாடசாலை மாணவர்களுக்கு கொரோனாத் தடுப்பூசி வழங்கப்பட்டுவருகிறது எனத் தொற்று நோயியல் பிரிவின் பிரதானி, விசேட மருத்துவ நிபுணர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார். மேலும், 16 முதல் 19 வயதுக்குட்பட்ட 1.1 மில்லியன் மாணவர்களுக்கு தடுப்பூசி வழங்கப்பட்டுள்ளது. தற்போது க.பொ.த உயர்தர மாணவர்களுக்கான பரீட்சையில் பல பிரிவுகளுக்கான பரீட்சைகள் முடிவடைந்துள்ளன.

இந்த நிலையில் அந்த மாணவர்கள் எந்தவொரு மருத்துவ அதிகாரி பிரிவிலும் தமக்கான இரண்டாவது டோஸ் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

## இதுவரை 9 லட்சம் பேர் தடுப்பூசியைப் பெறவில்லை

கொழும்பு, பெப். 26

இலங்கையில் இதுவரை 9 லட்சத்துக்கும் அதிகமானோர் கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவில்லை எனத் தொற்றுநோயியல் பிரிவின் இயக்குநர் மருத்துவர் சமித்த கினிகே தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் கூறுகையில்;

12 வயதுக்கு மேற்பட்ட 17.6 மில்லியன் பேர் தடுப்பூசியைப் பெறத் தகுதியுடையவர்கள்.

எனினும் இதுவரை 16.7 மில்லியன் பேர் மாத்திரமே தடுப்பூசி செலுத்தியுள்ளனர். மேலும் 20 வயதுக்கு மேற்பட்டவர்களின் 14.5 மில்லியன் பேர் பூஸ்டர் டோஸைப் பெறத் தகுதியானவர்கள்.

ஆனால் 6.6 வீதமானோரே அதனைப் பெற்றுள்ளனர். அத்துடன் 60 வயதுக்கு மேற்பட்டவர்களில் 1.1. மில்லியன் பேர் இன்னமும் பூஸ்டர் டோஸைப் பெறவில்லை. எனவே மக்கள் தயங்காது கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ளவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை
உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்

## உண்மை முகம் தோலுரிக்கப்படுமா?

தாமதிக்கப்பட்ட நீதி மறுக்கப்பட்ட நீதிக்குச் சமம் என்பார்கள். ஆனாலும் சில விடயங்களில் நீதி தேவதை காலம் கடந்த பின்னராவது கண்ணைத் திறப்பதும் நடக்கின்றது. இலங்கையின் நீதித்துறையால் நிலைநாட்டப்படாமல் போன நீதி, பிரிட்டனாலாவது நிலை நாட்டப்படுமா என்ற எதிர்பார்ப்பு தமிழ் மக்கள் மத்தியில் ஏற்பட்டுள்ளது.

2000ஆம் ஆண்டு சந்திரிகா அம்மையாரின் ஆட்சிக் காலத்தில் யாழ்ப்பாணத்தில் வைத்து ஊடகவியலாளர் நிமலராஜன் சுட்டுப்படுகொலை செய்யப்பட்டிருந்தார். அவரது வீடு மீது கிரனேட் வீசி தாக்குதல் நடத்தி கொலையாளிகள் வெறியாட்டம் நடத்தியிருந்தனர். அந்தக் கோரச் சம்பவத்தில் அப்போது இராணுவ துணைக்குழுவாக இயங்கிய ஈ.பி.டி.பி. மீதே கொலைக் குற்றச்சாட்டு சுமத்தப்பட்டிருந்தது.

இந்த வழக்கில் பிரதான சந்தேகநபராக அந்தக் கட்சியின் உறுப்பினரான நெப்போலியன் என்று அழைக்கப்படும் செபஸ்டியன் ரமேஸ் கைதாகி பின்னர் பிணையில் விடுவிக்கப்பட்டிருந்தார். இதன் பின்னர் 2001ஆம் ஆண்டு ஊர்காவற்றுறை பிரதேசத்தில் தேர்தல் பரப்புரைக்குச் சென்ற தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் மீது தாக்குதல் நடத்திக் கொலை செய்த குற்றச்சாட்டில் நெப்போலியனுக்கு தூக்குத் தண்டனை விதிக்கப்பட்டிருந்தது. அவரை சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்து நாட்டுக்குக் கொண்டுவருமாறும் 2016ஆம் ஆண்டு நீதிமன்றம் தீர்ப்பளித்திருந்தது.

கொலைக்குற்றச்சாட்டில் கைதாகி பிணையில் விடுவிக்கப்பட்டிருந்த நிலையில் அப்போதைய ஆட்சியாளர்களின் தயவுடன் நெப்போலியன் வெளிநாட்டுக்குத் தப்பிச் சென்றிருந்தார். சர்வதேச பொலிஸாரின் உதவியுடன் கைது செய்யுமாறு 2016ஆம் ஆண்டு நீதிமன்றம் தீர்ப்பளித்தும் எதுவித நடவடிக்கைகளும் எடுக்கப்பட்டிருக்கவில்லை. இவ்வாறானதொரு நிலையிலேயே பிரிட்டனின், போர்க்குற்றப் பிரிவு பொலிஸாரால் நெப்போலியன் கைதாகி விசாரிக்கப்பட்டு பிணையில் விடுவிக்கப்பட்டுள்ளார். நிமலராஜன் கொலை வழக்கில் அவர் தொடர்பான மேலதிக தகவல்களை எதிர்பார்ப்பதாக பொலிஸார் கூறியிருக்கின்றனர்.

இலங்கையில் நிலைநாட்டப்படாமல் போன நீதி, பிரிட்டனில் நிலைநாட்டப்படும் என்ற நம்பிக்கையை இந்தச் செயற்பாடு ஏற்படுத்தியுள்ளது.

இலங்கையின் ஆட்சியாளர்களுடன் இணைந்து அமைச்சராக பதவி வகிப்பவர் ஈ.பி.டி.பி. கட்சியின் செயலர் டக்ளஸ் தேவானந்தா. இவரது கட்சி மீது கடந்த காலங்களில் மக்கள் பல்வேறு குற்றச்சாட்டுக்களை சுமத்தியிருந்தனர். கடத்தல் சம்பவங்களுடன் இவரது கட்சிக்கு நேரடித் தொடர்பு இருப்பதாக மக்கள், ஜனாதிபதி ஆணைக்குழு முன்பாக பகிரங்கமாகவே சாட்சியமும் அளித்திருந்தனர்.

இவை எல்லாவற்றுக்கும் மேலாக ஈ.பி.டி.பி. கட்சியிலிருந்து விலகிய முன்னாள் உறுப்பினர் ஒருவர் யாழ்ப்பாணத்தில் நடத்திய பத்திரிகையாளர் சந்திப்பில், ஈ.பி.டி.பி.யின் கொலை வெறியாட்டங்களை பட்டியலிட்டிருந்தார். குறிப்பாக நிமலராஜன் கொலை வழக்கில், நெப்போலியன் தலைமையிலான அணியினரே தொடர்புபட்டிருந்ததாகத் தெரிவித்திருந்தார். அத்துடன் உதயன் பத்திரிகை அலுவலகத்துக்குள் புகுந்து துப்பாக்கிச்சூடு நடத்தி இருவரை படுகொலை செய்த சம்பவத்துடனும் ஈ.பி.டி.பி.யினரே தொடர்பு பட்டுள்ளனர் என்று தெரிவித்திருந்தார்.


இவையெல்லாவற்றையும் தமது கட்சி மீதான சேறுபூசல்கள் என்று வர்ணித்து அதனை மறுத்து வந்திருந்தார் டக்ளஸ் தேவானந்தா. ஆனால் காலம், ஈ.பி.டி.பியின் முகத்தை தோலுரித்துக் காட்டுவதற்கான சந்தர்ப்பத்தை வழங்கியிருக்கின்றது.

நிமலராஜன் கொலை தொடர்பில் சேகரிக்கப்பட்ட தகவல்களை, தெரிந்த தகவல்களை வழங்கி உதவுமாறு பிரிட்டன் பொலிஸார் கோரியிருக்கின்றனர். இதன் ஊடாக பிரதான சந்தேகநபரான நெப்போலியன் மீதான குற்றச்சாட்டுக்கள் நிரூபிக்கப்பட்டு அவர் தண்டிக்கப்படவேண்டும். அவர் கடந்த காலங்களில் தான் மேற்கொண்ட, தனது கட்சி மேற்கொண்ட துணை இராணுவ நடவடிக்கைகளை வெளிப்படுத்தவேண்டும். அவை வெளிப்படுத்தப்படுவதன் ஊடாகவே பல கேள்விகளுக்கான விடை கிடைக்கும்.

(இ-3)

## நாளொரு நல்வார்த்தை

"நாம் நமது நேரத்தை செலவிடும் விதம் நாம் யார் என்பதை வரையறுக்கிறது" - ஜோனதன் எஸ்ட்ரின்




# தொடரும் மின்சாரத் தடையால் தடுப்பூசிகள் பழுதடையலாம்?

### எரிபொருளைக் கோரும் சுகாதார அமைச்சு




**கொழும்பு,பெப்.26**

**நாட்டில் தற்போது தொடரும் மின்சாரத் தடையால், கொரோனாத் தடுப்பூசிகளை குளிரூட்டிகளுள் சேமிக்க முடியாத நிலைமை ஏற்பட்டுள்ளது.**

குளிரூட்டிகளில் களஞ்சியப்படுத்தியுள்ள தடுப்பூசிகளை பராமரிப்பதற்கான மின்பிறப்பாக்கிகளுக்கு எரிபொருள் தொடர்ச்சியாகத் தேவை என்று சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

நாட்டில் கையிருப்பில் உள்ள தடுப்பூசிகள் எதிர்வரும் ஜூலை மாதத்துடன் காலாவதியாகும். இவ்வாறான பின்னணியில், நாட்டில் நடைமுறைப்படுத்தப்படும் மின் தடை காரணமாக, தடுப்பூசிகள் களஞ்சியப்படுத்தியுள்ள குளிரூட்டிகளை பராமரிப்பதற்காக, தொடர்ச்சியான எரிபொருள் விநியோகம் அவசியம் என்று சுகாதார சேவைகள் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் அசேல குணவர்தன தெரிவித்துள்ளார்.

மின் தடை நடைமுறைப்படுத்தப்படும் காலப்பகுதிகளில், குளிரூட்டப்பட்ட களஞ்சியங்களுக்கு, மேலதிக மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்கப்படுகின்றது. எரிபொருள் கிடைக்கா விட்டால், மேலதிக மின்பிறப்பாக்கிகள் மூலம் மின்சாரத்தைப் பெற்றுக் கொள்ள முடியாமல் போகும். எனினும், தற்போது வரை இதுபோன்ற பிரச்சினை ஏற்படவில்லை என்று பிரதி சுகாதார சேவைகள் பணிப்பாளர், விசேட மருத்துவர் ஹேமந்த ஹேரத் தெரிவித்துள்ளார் (ஒ-4-இ)

# பிரிவினைவாத அரசியலால் '13' கிடைப்பது சாத்தியமல்ல

### அமைச்சர் வாசுதேவ தெரிவிப்பு

கொழும்பு,பெப்.26

வடக்கு மாகாணத்தில், பிரிவினைவாத அரசியல் தலைதூக்கும் பட்சத்தில், அரசமைப்பின் 13ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடை முறைப்படுத்தமுடியாமல் போகும் என்று ஜனநாயக இடதுசாரி முன்னணியின் தலைவரும், மூத்த அமைச்சருமான வாசுதேவ நாணயக்கார தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டம் தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில், இந்தச் சட்டம் தமிழ் மக்களால் ஏற்றுக் கொள்ளப்பட்ட ஓர் உடன்படிக்கை. அந்த உடன்படிக்கையின் பிரகாரமே மாகாணசபை முறைமை உருவாக்கப்பட்டது. இணைந்திருந்த வடக்குக் கிழக்கு மாகாணசபை, உயர் நீதிமன்றத் தீர்ப்பின் பிரகாரம், வடக்கு, கிழக்கு மாகாணங்கள் எனப் பிரிக்கப்பட்டது. தற்போது அவை இரண்டும் இயங்குகின்றன. எனினும், அதிகாரம் தொடர்பிலான பிரச்சினை உள்ளது.

வடக்கில் பிரிவினைவாத அரசியலின் தாக்கம் குறைவடையும் போது, அதிகாரங்களை அதிகரிக்க முடியும். ஆனால் பிரிவினைவாதத் தாக்கம் வடக்கில் அதிகரிக்கும் போது, அரசமைப்பின் 13 ஆவது திருத்தச்சட்டத்தை முழுமையாக நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை ஏற்படும் - என்றார்.

(ஒ-4,44)

நாளை 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை மாசி 15
சுபநேரம் : 09.29 - 10.59
ராகுகாலம்: 04.59 - 06.29
ஏகாதசி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



அன்னை அரவணைப்பில் 12 . 07 . 1944

ஆண்டவன் அரவணைப்பில் 08 . 03 . 2021

### அமரர் ஆறுமுகசாமி நாகேந்திரா

(ஓய்வு பெற்ற தொழில்நுட்ப உத்தியோகத்தர் அநுராதபுரம், யாழ். மற்றும் முல்லை கல்வித் திணைக்களம்)

திதி - மாசி மாத அபரபக்க ஏகாதசி

ஆண்டு ஒன்றானாலும் உங்கள் நினைவுகள்
எம்மை விட்டு அகலவில்லை
ஆறுமோ எம்மனம் அவனியிலே
குடும்ப குலவிளக்காய் விளங்கிய
எங்கள் அன்புத் தெய்வமே
அன்பு நினைவுகளுடன் உங்கள்
ஆத்மா சாந்தியடைய
வரிசப்புலம் மஹாமாரி அம்மன்,
பூந்தோட்ட ஞான வைரவரை பிரார்த்திக்கின்றோம்

(CS 18520) (3/6)

இல. 20, காமாட்சி இல்லம்
அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு, சுன்னாகம்.

குடும்பத்தினர்
021 224 0384



## 13 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 03 . 03 . 1958

இறப்பு 20 . 02 . 2009

### அம்பலவாணர் பரமநாதன்

(பொறியியல் உதவியாளர், நீர் வழங்கல் வடிகாலமைப்புச் சபை - யாழ்ப்பாணம்)

திதி: அபரபக்க ஏகாதசி [26.02.2022]

அன்புள்ள அப்பா!

இன்று போல ஒருநாளில்
உங்களைப் பிரிந்தோம், பின்பு
வளர்கிறோம்.
வாழ்கிறோம்.
வணங்குகிறோம்.
வாழ்த்துங்கள்
வழிகாட்டியாய், வழித்துணையாய், வழிநடத்தி
என்றும் எங்களோடு இருங்கள்.

"திருவதிகை"
வேளாவை, அளவெட்டி.

(cs. 43128) (2.6)

அன்புடன்
பிள்ளைகள்.


## தென்மராட்சியில் ரயிலில் மோதி கால்நடைகள் சாவு

சாவகச்சேரி, பெப் . 26

தென்மராட்சி தெற்குப் பகுதியில் கடந்த ஒரு வாரமாக தினமும் கால்நடைகள் ரயிலில் மோதி சாவடைகின்றன என்று மக்கள் தெரிவித்துள்ளனர்.

காலபோக நெற்செய்கை மேற்கொள்ளப்பட்ட வேளையில் கால்நடைகளைக் கட்டி வளர்க்குமாறு அறிவிக்கப்பட்டதால் நெல் அறுவடை முடியும் வரை கால்நடை கள் கட்டி வளர்க்கப்பட்டன. தற்போது நெற்செய்கை முடிவடைந்து சிறுதானியப் பயிர்கள் விதைப்பு ஆரம்பிக்கப்படதால் குறித்த பகுதியில் தண்டவாளத்தை அண்டிய வயல்களில் மேய்ச்சலுக்கு விடப்படும் கால்நடைகளே இவ்வாறு தினமும் ரயிலில் மோதி சாவடைகின்றன என்று மக்கள் கவலையுடன் தெரிவித்தனர். (ஒ-ரி-1.9)

## ஸ்கந்த ஹோமம்

சாவகச்சேரி, பெப். 26

மிருசுவில் உசன் கந்தசுவாமி கோயிலில் வருடாந்தம் நடத்தப்படும் ஸ்கந்த ஹோமம் எதிர்வரும் மார்ச் 6 ஆம் திகதி நடைபெறவுள்ளது.

கோயில் பிரதமகுரு சிவஸ்ரீ இ. கேதீஸ்வரக் குருக்கள் தலைமையில் குடாநாட்டின் பல சிவாச்சாரியர்களால் ஸ்கந்தஹோமம் நடத்தப்படும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஒ-ரி1,9)

## தொல்லியல் கற்கள் கடத்தல்: 10 பேருக்கு விளக்கமறியல்

*மாகாணசபை முன்னாள் உறுப்பினரும் உள்ளடக்கம்*

முல்லைத்தீவு, பெப்.26

தொல்பொருள்கள் எனச் சந்தேகிக்கப்படும் இரண்டு பெரும் கற்களை முல்லைத்தீவிலிருந்து வவுனியாவுக்கு கொண்டு செல்ல முற்பட்டனர் என்ற குற்றச்சாட்டில் மாகாணசபை முன்னாள் உறுப்பினர் உள்ளிட்ட 10பேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:

வடமாகாண சபையின் வவுனியா மாவட்ட முன்னாள் உறுப்பினர் மற்றும் பெண் ஒருவர் உள்ளிட்ட 10 பேர் முல்லைத்தீவு ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட தண்ணீர்முறிப்புப் பிரதேசத்திலிருந்து இரண்டு கற்களை அகழ்ந்து கனரக வாகனங்களில் ஏற்றிச் சென்றுள்ளனர். அந்த வேளையில் வீதிச் சோதனையில் ஈடுபட்ட இராணுவத்தினர் அவர்களை மறித்து வாகனத்தைச் சோதனையிட்டனர். அவர்கள் எவ்வித அனுமதியுமின்றி குறித்த கற்களை கொண்டு சென்றமை தெரியவந்ததையடுத்து ஒட்டுசுட்டான் பொலிஸார் 10பேரையும் கைதுசெய்தனர். கடந்த செவ்வாய்க்கிழமை முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப்படுத்திய போது எதிர்வரும் மார்ச் மாதம் 8ஆம் திகதிவரை 10 பேரையும் விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. (வ-19)



முல்லைத்தீவு மாவட்டத்தின் அனிச்சங்குளம் பாடசாலைக்கு கனடாவில் வசிக்கும் மோகனதாஸின் நிதிப்பங்களிப்பில் பூமணியம்மா அறக்கட்டளை[illegible] பூமணியம்மா அறக்கட்டளையின் [illegible] ஆகியோரால் திறந்து வைக்கப்பட்டது. (ஒ-ரி1)

## யாழ்.பல்கலைக்கழத்தின் மானுடம் 2022 ஆய்வு மாநாடு

யாழ்ப்பாணம், பெப்.26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழத்தால் மானுடம் 2022 என்னும் பெயரிலான சர்வதேச ஆய்வு மாநாடு எதிர்வரும் ஜூலை மாதம் நடத்தப்படவுள்ளது. மனிதப் பண்பியல் மற்றும் சமூக விஞ்ஞானக் கற்கைகளின் நூற்றாண்டு: தொடர்ச்சிகள், விலகல்கள், செல்நெறிகள் எனும் கருப்பொருளில் இந்த ஆய்வு மாநாடு இடம்பெறவுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சர்வதேச ஆய்வு மாநாட்டுத் தொடரின் ஒருபகுதியாகக் கலைப்பீடம் இந்த மாநாட்டை ஒழுங்கமைத்துள்ளது. ஆய்வு மாநாடு தொடர்பான மேலதிக விவரங்களை http://www.arts.jfn.ac.lk/index.php/mrc2022/ என்ற இணைய முகவரியினூடாகப் பார்வையிட முடியும். (வ-இ)

## பட்டம் பெறவிருந்தவருக்கு கொரோனாத் தொற்று உறுதி

சாவகச்சேரி, பெப்.26

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பட்டமளிப்பு விழாவில் பட்டம்பெறவிருந்த ஒருவருக்கு கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டுள்ளது. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் 35ஆவது பொதுப் பட்டமளிப்பு விழா மார்ச் மாதம் 3ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது. பட்டம் பெறவுள்ள மாணவர்கள் பட்டமளிப்பு விழாவுக்கு முன்னர் கொரோனா பரிசோதனை அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும் என அறிவிக்கப்பட்டிருந்தது. இந்த நிலையில் தென்மராட்சிப் பகுதியைச் சேர்ந்த ஒருவர் சாவகச்சேரி மருத்துவமனையில் பி.சி.ஆர் பரிசோதனையை மேற்கொண்டிருந்தார். பரிசோதனை முடிவில் அவருக்குத் தொற்று உறுதிப் படுத்தப்பட்டுள்ளது. (வ-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ரஷ்யாவுக்கு எதிரான போரில் தனித்து விடப்பட்டுள்ளோம்

## உக்ரைன் ஜனாதிபதி கவலை



**வொஷிங்டன், பெப். 26**
**ரஷ்யாவுக்கு எதிரான போரில் நாங்கள் தனித்துப் போராடி வருகின்றோம். எங்கள் நாடு தனித்து விடப்பட்டுள்ளது என உக்ரைன் ஜனாதிபதி ஜெலென்ஸ்கி கவலை வெளியிட்டுள்ளார்.**

உக்ரைன் மீது ரஷ்யா தொடுத்துள்ள போரால் அங்கு கடும் பதற்றம் நிலவுகின்றது.

ரஷ்யாவின் தாக்குதலில் இதுவரை 137 பேர் பலியாகியுள்ளனர் எனவும் 316 பேர் வரையில் படுகாயங்களுக்கு உள்ளாகியுள்ளனர் எனவும் தெரிவிக்கப்படுகிறது. தலைநகர் கீவ் வில் இருந்து கிராமங் களை நோக்கிக் கார்கள் உள்ளிட்ட வாகனங்களில் மக்கள் செல்வதால், கடும் போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டுள்ளது. அத்துடன் கீவ் நகர் மெட்ரோ ரயில் நிலையங்களில் ஆயிரக்கணக்கானோர் தஞ்சமடைந்துள்ளனர்.

இராணுவ நிலைகளைத் தாக்குவதாகக் கூறும் ரஷ்யா, உக்ரைன் மக்கள் மீது தாக்குதல் நடத்தி வருகிறது.

இந்த நிலையில் ரஷ்யாவுக்கு எதிரான போரில் நாங்கள் தனித்து விடப்பட்டுள்ளோம்.

ரஷ்யப் படைகளிடமிருந்து நாட்டைப் பாதுகாக்க அனைத்துத் தரப்பு மக்களும் முன்வரவேண்டும் என அவர் மேலும் தெரிவித்தார். (ச-இ)

# போர் வேண்டாம்...!




'போர் வேண்டாம்! எங்களுக்கு அவமானமாக இருக்கிறது' என்ற கோஷத்துடன் ரஷ்யாவின் செயின்ட் பீட்டர்ஸ்பர்க் பகுதியில் ஆயிரக்கணக்கான ரஷ்யர்கள் திரண்டு போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். உக்ரைன் மீது ரஷ்ய அதிபர் புடின் போர் தொடுத்துள்ள நிலையில் போரைக் கைவிட வேண்டும் என உக்ரைனுக்கு ஆதரவாக போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர். (ச)

# செர்னோபில் அணுவிபத்து தளத்தை ரஷ்யா கைப்பற்றியது

வொஷிங்டன், பெப். 26

உக்ரைனில் நேற்று இரண்டாவது நாளாக ரஷ்யாவின் இராணுவத் தாக்குதலில் செர்னோபில் அணு விபத்துத் தளத்தை ரஷ்ய கைப்பற்றியுள்ளது என உக்ரைன் தெரிவித்துள்ளது.

செர்னோபில் அணு உலையில் 1986ஆம் ஆண்டு நிகழ்ந்த விபத்து, மனித வரலாற்றில் பெரும் பொருள் சேதம் மற்றும் உயிரிழப்புகளை ஏற்படுத்திய மோசமான அணு விபத்தாகும்.

செர்னோபில் அணு விபத்துத் தளத்தை ரஷ்ய இராணுவம் கைப்பற்றியுள்ள நிலையில், ரஷ்யா படையெடுப்பைத் தொடர்ந்தால், அத்தகைய பேரழிவு மீண்டும் நடக்கும் என உக்ரைன் ஜனாதிபதி எச்சரித்துள்ளார். (ச)

# பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும்

## மோடி புடினுக்கு அறிவுறுத்து

புதுடில்லி, பெப்.26

உக்ரைன் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும் என ரஷ்ய அதிபரிடம் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தொலைபேசி மூலம் வலியுறுத்தியுள்ளார்.

உக்ரைன் மீது ரஷ்யா தாக்குதல் நடத்தி வருகின்றது. இதனையடுத்து உக்ரைன் மற்றும் அதனைச்சுற்றி உள்ள நாடுகளில் போர்ப் பதற்றம் அதிகரித்துள்ளது.

இந்த நிலையில் ரஷ்யா அதிபர் புடினுடன் பிரதமர் மோடி தொலைபேசியில் பேச்சுவார்த்தை நடத்தினார். இதில் "உக்ரைன் விவகாரத்தில் பேச்சுவார்த்தை மூலம் தீர்வு காணவேண்டும். வன்முறையை உடனடியாக நிறுத்தவேண்டும்" என வலியுறுத்தியுள்ளார். மேலும் உக்ரைனில் சிக்கியுள்ள இந்தியர்களின் பாதுகாப்பை உறுதி செய்யவேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ச-இ)



# ரஷ்யா மீது பொருளாதாரத் தடையை விதித்தது அமெ., நியூஸி.

வொஷிங்டன், பெப். 26

உக்ரைனில் பல்முனைத் தாக்குதல் நடத்தி வரும் ரஷ்யா மீது அமெரிக்கா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் பொருளாதாரத் தடை விதித்துள்ளன.

உக்ரைன் மீது ரஷ்யா பலமுனைத் தாக்குதல்களை கடந்த வியாழக்கிழமை தொடங்கியது.

இந்த நிலையில் உக்ரைன் மீதான இராணுவ நடவடிக்கைகளை ரஷ்யா உடனடியாகத் திரும்பப் பெறவேண்டும்.

ரஷ்யாவின் செயல் தவறானது என அமெரிக்கா, நியூஸிலாந்து ஆகிய நாடுகள் பொருளாதாரத் தடையை விதித்துள்ளன.

இதனிடையே, உக்ரைனில் போர் பதற்றம் நிலவும் சூழலில் உடனடி நிதியுதவி அளிக்கத் தயார் என உலக வங்கி அறிவித்துள்ளது. (ச-இ)

# இந்தியாவில் படகு கவிழ்ந்து 16 பேர் மாயம்

சென்னை, பெப்.26

இந்தியாவில் ஜார்க்கண்ட் மாநிலத்திலுள்ள ஆற்றில் 18 பேர் பயணித்த படகு கவிழ்ந்ததில் 16 பேர் மாயமாகியுள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

படகு பார்பிண்டியா பாலம் அருகே சென்ற நிலையில் திடீரென கன மழை மற்றும் பலத்த காற்று வீசிய நிலையில் ஆற்றுக்குள் படகு கவிழ்ந்து விபத்துக்குள்ளாகியுள்ளது.

விபத்து தொடர்பில் தகவலறிந்த மீட்புக்குழுவினர் சம்பவ இடத்துக்கு விரைந்து சென்று மீட்புப் பணியில் ஈடுபட்டனர்.

அதில், 2 பேர் இதுவரை மீட்கப்பட்டுள்ளனர் எனவும் 16 பேர் ஆற்றில் அடித்துச் செல்லப்பட்டு மாயமாகியுள்ளதால் அவர்களைத் தேடும் பணிகள் இடம்பெற்று வருகின்றன எனவும் தெரிவிக்கப்படுகிறது. (ச-இ)

# இன்றைய நாள் (ராசிபலன்)

**மேடம்:** முயற்சியில் வெற்றி கிடைக்கும். நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். நண்பர்களிடம் அளவோடு நெருங்குவது நல்லது. வியாபாரத்தில் விற்பனை சுமாராக இருக்கும்.

**இடபம்:** பணியிடத்தில் மேலதிகாரிகளின் ஆதரவைப் பெறுவீர்கள். உழைப்பின்மூலம்கூடுதல்நன்மையை காண்பீர்கள். கனவு நனவாகும். வசதிகளை மேம்படுத்துவீர்கள்.

**மிதுனம்:** வியாபாரத்தில் லாபம் உண்டு. மகிழ்ச்சி கூடும். நண்பருடன் இருந்து வந்த மனஸ்தாபம் நீங்கும். பயணத்தால் நீங்கள் எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்காது..

**கடகம்:** உங்களது செயல்களால் உறவினர் இடையே ஒற்றுமை அதிகரிக்கும். பணியை சரியாக பயன்படுத்துவீர்கள். புதிய துறையில் ஈடுபடுவீர்கள். மகிழ்ச்சி அதிகரிக்கும்.

**சிம்மம்:** சகபணியாளர்களின் ஒத்துழைப்பால் உங்களுக்கு நன்மை ஏற்படக்கூடும். சிலரது உண்மை முகம் தெரிய வருவதால் குழப்பம் ஏற்படும். தெய்வீக எண்ணங்கள் பெருகும்.

**கன்னி:** தொலைபேசி வழியாக வரும் செய்தி மன அமைதியை மீட்கும். பணியிடத்தில் இருந்த நெருக்கடி அகலும். [illegible] விடாதீர்கள். பணியிடத்தில் நடக்கும் நிகழ்வு பரபரப்பை ஏற்படுத்தும்.

**துலாம்:** உறவினர்களால் ஏற்பட்ட சிரமங்கள் இன்று நீங்கும். பகைவர் மனம் மாறுவர். தாயின் அன்பைப் பெறுவீர்கள். பிரச்சினை ஒன்று தீரும். நீங்கள் எடுத்த முயற்சி கைகூடும். தெளிவு பிறக்கும்.

**விருச்சிகம்:** உறவினர் விஷயத்தில் தலையிட வேண்டாம் ஒருவிஷயத்தை நினைத்து அதிகளவில் குழப்பம் அடைவீர்கள். வாகன வசதி அதிகரிக்கும். வியாபாரத்தில் வரவு சற்று உயரும்.

**தனுசு:** பயணத்தின்போது பொருள்களைக் கவனமாக வைத்துக் கொள்ளுங்கள். புதிய முதலீடுகள் செய்வதைச் சில காலத்துக்குத் தவிர்க்கவும். சக பணியாளர்களை அனுசரித்து செல்வது நல்லது.

**மகரம்:** பொருளாதார நெருக்கடி சற்றே அகலும். நட்பு வட்டம் விரியும். புதிய வாய்ப்புகளை பயன்படுத்தத் தயங்க வேண்டாம். குழந்தைகளால் ஏற்பட்ட சிரமம் நீங்கும்.

**கும்பம்:** மனதில் தன்னம்பிக்கை அதிகரிப்பதால் பேச்சில் கம்பீரம் பிறக்கும். சொந்தங்கள் உதவி வேண்டி உங்களைத் தேடி வருவர். கடன் பிரச்சினை தீரும். மனதில் மகிழ்ச்சி நிலவும்.

**மீனம்:** குழம்பிய மனநிலை தெளிவாகி உங்களின் செயற்பாடு மேம்படும். வீண் விவாதங்களைத் தவிர்க்கப்பாருங்கள். பரிசு வாங்குவீர்கள். உங்களின் புகழ் அதிகரிக்கும். பெரியோரின் ஆசி கிடைக்கும்.


Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# ரோர்ச்லைட்டுடன் சபைக்கு வந்தமைக்காக ஹரினுக்கு எதிராக பொலிஸ் முறைப்பாடு

கொழும்பு,பெப்.26

நாடாளுமன்றுக்குள் ரோர்ச்லைட் எடுத்து வந்தார் என்ற குற்றச்சாட்டில், ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் ஹரின் பெர்னாண்டோவுக்கு எதிராக, பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்படும் என்று சபாநாயகர் தெரிவித்துள்ளார்.

நாட்டில் தற்போது நடைமுறைப்படுத்தப்படும் மின் துண்டிப்புக்கு எதிர்ப்பை வெளிக்காட்டும் வகையில், அவர் சபை அமர்வுக்கு ரோர்ச் லைட்டுடன் சென்றுள்ளார். இதற்கு ஆளும் கட்சியினர் கடும் எதிர்ப்பை வெளியிட்டதுடன் பாதுகாப்பு அச்சுறுத்தல் உள்ளது என்றும் சபையில் தெரிவித்தனர். இதனையடுத்து சபாநாயகர், விசாரணைகளை முன்னெடுக்குமாறு பொலிஸ்மா அதிபரிடம் முறைப்பாடு செய்யப்படும் -என்றார். (ஒ-4-இ)



## குளத்தில் விழுந்த காட்டுயானை

முல்லைத்தீவு, பெப். 26

ஒட்டுசுட்டான் பிரதேசத்துக்குட்பட்ட நல்லி முறிப்பு குளத்தில் காட்டுயானை நடக்க முடியாத நிலையில் விழுந்துள்ளது.

காட்டுயானை கடந்த 18 ஆம் திகதி கால் முறிந்து குளத்தில் விழுந்த நிலையில் முல்லைத்தீவு மாவட்ட வனஜீவராசிகள் திணைக்களத்தால் சிகிச்சையளிக்கப்பட்டது.

இந்த நிலையில் நேற்று முன்தினமும் குறித்த குளக்கரைப் பகுதியில் எழும்பி நடக்க முடியாத நிலையில் விழுந்துள்ளது.

காட்டுயானைக்கு சிகிச்சையளிக்கும் நடவடிக்கையில் வனஜீவராசிகள் திணைக்களத்தினர் ஈடுபடவுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டது. (ஒ-ரி1-19)

## 35 லட்சம் ரூபா பணத்தை திருப்பிக் கொடுத்த பெண்

### அவரது நேர்மைக்குப் பாராட்டு

கொழும்பு,பெப்.26

தனது வங்கிக் கணக்குக்கு வைப்பிலிடப்பட்ட 35 லட்சம் ரூபா பணத்தை, பெண் ஒருவர் மீள வங்கியில் ஒப்படைத்துள்ளார்.

அவரது நேர்மையை சமூக ஊடகங்களில் பலரும் பாராட்டியுள்ளனர்.

இந்தச் சம்பவம் மாத்தறையில் இடம்பெற்றுள்ளது.

மாத்தறை வங்கிக் கிளையில் பெண் ஒருவரின் கணக்குக்கு, தவறுதலாக 35 லட்சத்து 91ஆயிரம் ரூபா பணம் வைப்பிலிடப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அவரது கைத்தொலைபேசிக்கு குறுந்தகவல் வந்துள்ளது.

அடுத்த நாள் காலை தனது மகனுடன் குறித்த வங்கிக்குச் சென்ற பெண், அந்தப் பணத்தை மீள எடுத்து, தவறாக வைப்பிட்ட நிதி நிறுவனத்திடம் ஒப்படைத்துள்ளார். இதனை அவரது மகன் ஆதாரத்துடன் தனது பேஸ்புக் பக்கத்தில் பதிவிட்டுள்ளார். (ஒ-4-இ)

## 6 இலங்கைத் தமிழர்கள் திருச்சியில் போராட்டம்

கொழும்பு,பெப்.26

தங்களை விடுதலை செய்யக் கோரி, தமிழகம் திருச்சி முகாம் சிறையில் உள்ள 6 இலங்கைத் தமிழர்கள் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளனர்.

சிறைப்படுத்தப்பட்டு மூன்று ஆண்டுகளுக்கு மேல் கடந்துள்ள நிலையில், தமக்கு எதிராக எந்தக் குற்றப்பத்திரமும் தாக்கல் செய்யப்படவில்லை என்று தெரிவித்து, கடந்த புதன்கிழமை தொடக்கம் உணவுத் தவிர்ப்புப் போராட்டத்தை ஆரம்பித்துள்ளனர்.

அதிகாரிகள் பேச்சு நடத்தியதன் பின்னரும், அவர்கள் போராட்டத்தைத் தொடர்ந்துள்ளனர் என்று இந்திய ஊடகங்கள் தெரிவிக்கின்றன. (ஒ-4-இ)



## பஸிலின் இந்தியப் பயணம் மீண்டும் தாமதம்

கொழும்பு, பெப்.26

நிதி அமைச்சர் பஸில் ராஜபக்சவின் இந்தியப் பயணம் மீண்டும் ஒத்திவைக்கப்பட்டுள்ளது.

இந்தியா வழங்கவுள்ள நிதியுதவி தொடர்பான ஒப்பந்தங்களை இறுதி செய்வதற்காக நேற்றையதினம் அவர் இந்தியாவுக்குப் பயணமாவார் என முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையிலேயே குறித்த பயணம் ஒத்திவைக்கப்பட்டது என அறிவிக்கப்பட்டுள்ளது. அத்தியாவசிய பொருள்கள் மற்றும் மருந்துகளுக்கான ஒரு பில்லியன் அமெரிக்க டொலர் நிதியை இந்தியாவிடமிருந்து கடனாகப் பெறுவது இந்தப் பயணத்தின் நோக்கம் என்பது குறிப்பிடத்தக்கது. (வ-இ)

## உயர்தரப் பரீட்சையில் மாணவர்களுக்கு அநீதி

கொழும்பு,பெப்.26

க.பொ.த உயர்தரப் பரீட்சை நிலையங்கள் இரண்டில் மாணவர்கள் சிலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது. இது தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவர்கள் வலயக் கல்வி அலுவலகத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

க.பொ.த உயர்தரப் பரீட்சையில் கலைப் பாடம் தொடர்பான வினாத்தாள்கள் கையளிக்கும் வேளையில், மாணவர்கள் சிலருக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது.

பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும், கம்பஹா தக்ஷிலா கல்லூரியின் பரீட்சை நிலையத்திலும் இந்தச் சம்பவங்கள் இடம்பெற்றுள்ளன.

பத்தேகம கிறிஸ்தவ ஆண்கள் கல்லூரி பரீட்சை நிலையத்தில், ஆறு மாணவர்களிடம் வினாத்தாள்கள் குறித்த நேரத்துக்கு முன்னதாகப் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளன.

இதேவேளை, கம்பஹா தக்ஷிலா கல்லூரியில் நிறுவப்பட்டுள்ள பரீட்சை நிலையத்தின் இரண்டு மாணவர்களுக்கு கலை வினாத்தாளின் இரண்டாம் பாகம் வழங்கப்படவில்லை என்று தெரிவிக்கப்படுகின்றது. (ஒ-4-இ)

## பத்மினி ரணவக்கவின் மனு மே மாதம் பரிசீலனைக்கு

கொழும்பு, பெப்.26

கொழும்பு மேல் நீதிமன்ற முன்னாள் நீதிபதி பத்மினி என். ரணவக்கவுக்கு எதிராக அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு முன்வைத்த பரிந்துரைகள் மீதான மனு மே மாதம் 4 ஆம் திகதி பரிசீலிக்கப்படவுள்ளது.

உயர் நீதிமன்ற நீதியரசரான காமினி அமரசேகர தலைமையிலான நீதியரசர்கள் குழு இதற்கான உத்தரவைப் பிறப்பித்தது.

அரசியல் பழிவாங்கல் தொடர்பில் ஆராய்ந்த ஜனாதிபதி ஆணைக்குழு தனக்கு எதிராக முன்வைத்துள்ள பரிந்துரைகளை இரத்துச் செய்து உத்தரவிடுமாறு மனுதாரர் பத்மினி என். ரணவக்க இம்மனுவூடாக கோரியுள்ளார். (வ-இ)

## மகளின் பட்டமளிப்புக்குச் சென்ற குடும்பத்தினர் விபத்தில் சிக்கினர்

### தந்தை சாவு

கொழும்பு,பெப்.26

மகளின் பட்டமளிப்பு விழாவுக்குச் சென்ற குடும்பத்தினர் வீடு திரும்பும் போது விபத்துக்குள்ளாகினர். அதில் தந்தை உயிரிழந்துள்ளார்.

இந்த விபத்து தெற்கு அதிவேக நெடுஞ்சாலையில் தொடங்கொட பகுதியில் நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. போகஹவெல பல்கலைக்கழகத்தில் இடம்பெற்ற பட்டமளிப்பின் பின்னர், வீடு திரும்பிக் கொண்டிருந்த, ஒரே குடும்பத்தைச் சேர்ந்த 8 பேர் சொகுசுக் காரில் பயணித்துள்ளனர். இதன்போது சிமெந்து ஏற்றப்பட்ட லொறியுடன் கார் மோதி விபத்துக்குள்ளானது. இதில் ஒருவர் உயிரிழந்ததுடன், நால்வர் படுகாயமடைந்தனர். பட்டம் பெற்றவரும் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார். (ஒ-4-இ)

## பழைய முறைமையிலே மாகாண சபைத் தேர்தல்

### தெரிவுக்குழு இணக்கம்



கொழும்பு,பெப்.26

புதிய முறைமை கொண்டு வரப்படும் வரை, பழைய முறையின் கீழ் மாகாண சபைத் தேர்தல் நடத்தப்படவேண்டும் என்று தேர்தல் மறுசீரமைப்புத் தொடர்பான நாடாளுமன்றத் தெரிவுக்குழுவில் இணக்கம் எட்டப்பட்டுள்ளது. இந்தத் தெரிவுக்குழு எதிர்வரும் மார்ச் முதலாவது வாரத்தில் மீண்டும் கூடவுள்ளது.

அதேவேளை, அனைத்து தேர்தல்களிலும் பெண்களின் பிரதிநிதித்துவத்தை 25 வீதமாக இருக்க பரிந்துரைப்பது மற்றும் இளைஞர் பிரதிநிதித்துவத்தைக் கட்டாயமாக்குதல் என்ற முன்மொழிவுக்கும் கொள்கையளவில் இணக்கம் காணப்பட்டது. (ஒ-4-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்



## வேலாயுதபிள்ளை சுபாஸ்சந்திரன்

இணுவில் மேற்கைப்பிறப்பிடமாகவும் குமரகோட்டம், கோண்டாவில் மத்தியை வசிப்பிடமாகவும் கொண்ட வேலாயுதபிள்ளை சுபாஸ்சந்திரன் நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான வேலாயுதபிள்ளை நல்லம்மா தம்பதியரின் நான்காவது மகனும், தியாகேஸ்வரியின் அன்புக்கணவரும், மயூரன் (SK யாழ். பல்கலைக்கழகம்), மயூரி (கனடா), மதுசன் (ஆசிரியர்-அல்அஸ்கர் தேசிய பாடசாலை மன்னார்), மாதுளன் (DO-நல்லூர் பிரதேச சபை), மகிந்தன் (தொழிநுட்பக்கல்லூரி-யாழ்ப்பாணம்) ஆகியோரின் அன்புத்தந்தையும், அரியநாயகம், முருகையா, செல்வராணி, செல்வேந்திரன், கருணாநிதி (கனடா), வரதன் (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரனும், தனபாலசிங்கம், பதஞ்செல்வி, விநாயகமூர்த்தி,அமரசிங்கம், சிவமதி, தாரணி ஆகியோரின் மைத்துனரும், தினேஸ் (மருமகன்-கனடா), நிஷான், நிதர்சனா ஆகியோரின் அன்புப்பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணயளவில் குமரகோட்டம் கோண்டாவில் மத்தியில் உள்ள அவரது இல்லத்தில் இடம்பெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக காரைக்கால் இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**சு.மயூரன் (மகன்)**

(CS 18535) (4/6)

# ரிதீகம பிரதேசத்தில்பெண் படுகொலை

குருநாகல், ரிதீகம பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சமகி மாவத்தையில் பெண் ஒருவர் தலைக்கவசத்தால் தாக்கப்பட்டு கொலை செய்யப்பட்டுள்ளார் எனத் தெரிவிக்கப்படுகிறது. அதேபகுதியைச் சேர்ந்த 67 வயதுடையவரே இவ்வாறு கொலை செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணின் மகளை விபத்துக்குள்ளாக்கிய வாகனச் சாரதியுடன் ஏற்பட்ட வாக்குவாதத்திலேயே வாகனச் சாரதி தனது கையிலிருந்த பாதுகாப்புத் தலைக்கவசத்தால் பெண்ணைத் தாக்கிக் கொலை செய்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் குறித்த வாகனச் சாரதி கைதுசெய்யப்பட்டு பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (ச-இ)

**வீட்டுப் பணிப்பெண் தேவை**

தங்கிநின்று மூன்று வயதுக் குழந்தையினைப் பார்ப்பதற்கும்.வீட்டுவேலை செய்வதற்கும், உகந்த நல்லொழுக்கம் உள்ள பணிப்பெண் ஒருவர் தேவை.(சம்பளம் பேசித்தீர்மானிக்கப்படும்.)

**077 308 3007**

**வாகனங்கள் வாடகைக்கு**

குறுகிய கால, நீண்டகால ஒப்பந்த அடிப்படையில் வாகனங்கள் வாடகைக்கு வழங்கப்படும். (அரச, தனியார் நிறுவனங்கள் விரும்பத்தக்கது.)

* Pickup Double cab (4wd Automatic)
* Crew cab Double cab (2wd Manual)
* One Cube Tipper

(CS 18508) (4/6)

**தொடர்பு:- 077 722 2130**

# மரண அறிவித்தல்



பிறப்பு :- 02.04.1937
இறப்பு :- 25.02.2022

## தம்பையா சத்தியமூர்த்தி

ஊர்காவற்துறையைப் பிறப்பிடமாகவும் நல்லூரை வசிப்பிடமாகவும் கொண்ட தம்பையா சத்தியமூர்த்தி நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை இறைபதம் அடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான தம்பையா முத்தம்மா தம்பதிகளின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான கனகரத்தினம் தங்கம்மா தம்பதிகளின் அன்பு மருமகனும், இராஜேஸ்வரி அவர்களின் அன்புக்கணவரும், சத்தியவாணியின் (லண்டன்) பாசமிகு தந்தையும், சிவகுமார் (லண்டன்) அவர்களின் அன்பு மாமனாரும் விஜயலட்ஷமி காலஞ்சென்றவர்களான பரதராசா, யோகநாதன், தனலட்ஷமி ஆகியோரின் அன்புச் சகோதரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 9.00 மணியளவில் நல்லூர் சங்கிலியன் வீதியில் உள்ள இல்லத்தில் நடைபெற்று அன்னாரின் பூதவுடல் தகனக்கிரியைக்காக செம்மணி இந்து மயானத்துக்கு எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்று கொள்ளவும்.

தகவல்
**சி.சத்தியவாணி(மகள்)**

(CS 18532)(4/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 30 . 01 . 1955



மறைவு 24 . 02 . 2022

## லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம்

(காரை மணிகண்டன், காரைநகர் சமாதான நீதவான்களுக்கான அமைப்பின் பிரதேசசபை அமைப்பாளர்)

காரைநகர் களபூமி சத்திரந்தையைப் பிறப்பிடமாகவும் 48, குமாரசாமி வீதி, கந்தர்மடத்தை வசிப்பிடமாகவும் கொண்ட லயன் கலாநிதி கனகசபை சுந்தரலிங்கம் நேற்றுமுன்தினம் (24.02.2022) வியாழக்கிழமை இறைவனடி சேர்ந்துவிட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான கனகசபை(C.T.B) நல்லம்மா தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்றவர்களான சிதம்பரப்பிள்ளை தங்கம்மா தம்பதியரின் அன்பு மருமகனும், இராஜலட்சுமியின் அன்புக்கணவரும் சுபதினி, சுகீவன்(சுவிஸ்), சுபஜா, சுபந்தா(அமரர்) ஆகியோரின் அன்புத் தந்தையும் மயூரன், கேசவன்(துவாரகா நகைமாடம்), ஆகியோரின் அன்பு மாமனாரும் பாணுஷா, நிதுஜன், டிஜேஷ், மதுசனா, இலக்கியன் ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை அவரது இல்லத்தில் காலை 8.00 மணிக்கு நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்: **குடும்பத்தினர்.**

(CS 18533) (4/6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 01 . 09 . 1932



மறைவு 25 . 02 . 2022

## திருமதி பராசக்தி தங்கராசா

அம்மன் கோவில் வீதி, சாவகச்சேரி வடக்கு, மீசாலையைப் பிறப்பிடமாகவும், வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி பராசக்தி தங்கராசா நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை காலமானார்.

அன்னார் திரு.சின்னையா தங்கராசா (அமரர்) அவர்களின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி வீரவாகு அன்னப்பிள்ளை ஆகியோரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான திரு.திருமதி சின்னையா மாணிக்கம் ஆகியோரின் அன்பு மருமகளும், அமுதஜோதி (ஆசிரியர், மட்டுவில் கமலாசினி வித்தியாலயம்), தவநேசன் (விரிவுரை இணைப்பாளர், யாழ்ப்பாணம் தேசிய கல்வியியற் கல்லூரி) ஆகியோரின் அன்புத் தாயாரும், ஜீவபாஸ்கரன் ( தபால் ஊழியர், சங்கானை தபால் நிலையம்), ரங்கா (அபிவிருத்தி உத்தியோகத்தர், மாவட்ட நீதவான் நீதிமன்றம், முல்லைதீவு) ஆகியோரின் அன்பு மாமியாரும், கிருஷிகன், கோவர்ணன், ஆரூரன், அபிசேகா, ஆரணன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், காலஞ்சென்றவர்களான தெய்வானைப்பிள்ளை, சிவக்கொழுந்து மற்றும் சரஸ்வதி, புஸ்பராஜமணி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற பொன்னுத் துரை மற்றும் சிவபாக்கியம், காலஞ்சென்ற சிவயோகம் ஆகியோரின் மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் மு.ப 10.00 மணியளவில் சாவகச்சேரி கண்ணாடிப்பிட்டி இந்து மயானத்துக்கு தகனக்கிரியைக்காக எடுத்துச் செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
**குடும்பத்தினர்.**

(CR 7947) 1/6

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# Viluthu Organization

## NOTICE

- Proposed New Shop For Viluthu Organization at near to Ammachchi building, Thirunelvely, Jaffna.
- Invites From Qualified contractors to undertake the 15x10 Ft scale steel shop.
- Tender documents can be collected over the phone or Email.

Telephone Number:- 077 062 9013

Email:- rajasegaranvickram@gmail.com

- The last date for the Submission of Tender 28th February 2022 at 3pm (Colombo)

(CS18225) (4/6)

No. 197, Aadiyapatham Road,Thirunelvely North, Thirunelvely, Jaffna.

## அரசியல் விஞ்ஞானம்

A/L 2022 பிரிவுகள் மானிப்பாய் BITSMANS கல்வி நிலையத்தில் வகுப்புக்கள் நடைபெறுகின்றன. சனி மற்றும் ஞாயிறு காலை 8.00 - 10.00

**உங்கள் அனுபவ ஆசான்**

**G. குணசீலன்**

**077 493 9688** (CS 18441) (3/6)

## பெயர் மாற்றம்

மாசிவன், நீர்வேலி மேற்கு, நீர்வேலியில் வசிக்கும் **செல்வநாதன் நதீஷா** ஆகிய நான் எனது பெயரை **செல்வநாதன் நிசாந்தி** என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் **செல்வநாதன் நிசாந்தி** என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை சோசலிச குடியரசுக்கு அமைவாக உறுதிப்படுத்துகின்றேன்.

(cs 43172) (2.6) செல்வநாதன் நிசாந்தி

## பெறுகை அறிவித்தல்
## வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்

01. தவிசாளர், பெறுகைக்குழு,வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர் அவர்களினால் தகுதி வாய்ந்த வழங்குனர்களிடமிருந்து முத்திரையிடப்பட்ட கேள்விகளை கீழ்க்குறிப்பிடப்பட்ட அட்டவணையில் விபரிக் கப்பட்ட பெறுகைக்காக கோரப்படுகின்றது.
02. தேசியப்போட்டி கேள்வி கோரல் நடைமுறைக்கமைவாக கேள்விகோரப்படுகின்றது.
03. கேள்விபெற தகுதியுடையவராவதற்கு வெற்றிபெறும் கேள்விதாரர் கறுப்புப்பட்டியலில் (Black List) சேர்த்துக்கொள்ளப்படாதவராகவும் அத்துடன் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனமாகவும் இருத்தல் வேண்டும்.
04. தேவையான தகைமைகள்,பெறுகை ஆவணம் பகுதி 111 இல் குறிப்பிடப்பட்டுள்ளது. மேலதிக தகவல்கள் தரவு அட்டவணை (Schedule) கேள்வி ஆவணம் பகுதி V இல் காட்டப்பட்டுள்ளது.
05. ஆர்வமுள்ள வழங்குனர்கள் வலிகாமம் கிழக்கு பிரதேசசபையின் தலைமையலுவலகத்தில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம். அத்துடன் மேற்கூறிய இடத்தில் வேலைநாட்களில் காலை 09.00 மணி முதல் பி.ப 16.00 மணிவரை 26.02.2022 ஆம் திகதியிலிருந்து 11.03.2022ஆம் திகதி வரை காலப்பகுதியில் கேள்வி ஆவணங்களை பார்வையிடலாம்.
06. ஆர்வமுள்ள வழங்குனர்கள்ஆங்கிலமொழியிலுள்ள பூரணமான கேள்வி ஆவண மொன்றை யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி ,புத்தூர் எனும் முகவரியில் அமைந்துள்ள வலிகாமம் கிழக்கு பிரதேச சபையில் 26.02.2022 தொடக்கம் 11.03.2022 ஆம் திகதி வரை அலுவலக நாட்களில் மு.ப 9.00 மணி முதல் 15.00 மணி வரை மீளளிக்கப்படாத பணமாக ரூபா.1000/-(வற் தவிர்த்து) செலுத்தி பெற்றுக்கொள்ளலாம். இத்தொகை பணமாக செலுத்தப்படல் வேண்டும்.
07. கேள்வி ஆவணங்களினை இருபிரதிகளில் தயாரித்து 11.03.2022ஆம் திகதி 15:00 மணிக்கு முன்பதாக கிடைக்கக் கூடியவாறு தவிசாளர், பிரதேசசபை பெறுகைக் குழு, வலிகாமம் கிழக்கு பிரதேசசபை,புத்தூர் எனும் முகவரிக்கு பதிவுத்தபாலிலோ அல்லது அலுவலகத்திலுள்ள பெறுகைப்பெட்டியினுள் நேரடியாகவோ இடப்படல் வேண்டும். காலந்தாழ்த்தப்பட்ட பெறுகைகள் நிராகரிக்கப்படும். கேள்வியானது கேள்வி நேரம் முடிவடைந்த உடனேயே வருகை தரும் பெறுகைதாரர் அல்லது அவர்களது பிரதிநிதி முன்னிலையில் திறக்கப்படும்.கிடைக்கப்பெற்ற கேள்வியின் ஒருபகுதியினை மட்டும் ஏற்றுக் கொள்வதற்கு அல்லது இப்பெறுகையை முழுமையாக இரத்து செய்வதற்கு பெறுகைக் குழுவிற்கு அதிகாரமுண்டு.
08. கேள்வியானது கேள்விகள் சமர்ப்பிக்கும் இறுதித் திகதியிலிருந்து 77(எழுபத்தேழு) நாட்கள் 27.05.2022) வரையும் செல்லுபடியாகும்.
09. கேள்வியாளர்களுக்கான முன் கலந்துரையாடல் வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவ லகத்தில் 07.03.2022ஆம் திகதியன்று மு.ப 10.00 மணிக்கு நடைபெறும்.
10. 1கேள்விப் பிணை வைப்புத் தொகையானது கீழே அட்டவணையிற் காட்டப்பட்டவாறு 5000.00 வினை பணமாக செலுத்தி பற்றுச்சீட்டினை கேள்வி ஆவணத்துடன் இணைக்க வேண்டும்.
11. இக்கேள்வி கோரலில் உள்ளநிபந்தனைகளில் அவசியமேற்படுமிடத்து மாற்றத்தை ஏற்படுத்தல், சேர்த்தல் அல்லது இல்லாது செய்தல் என்பவற்றின் அதிகாரம் கேள்விச்சபைக்கு உண்டு.

| இல | பெறுகை விபரம் | ஒப்பந்தத் தொகை | ஒப்பந்த இல | ஒப்பந்த காலம் | வேண்டப்படும் தரம் | கேள்வி பிணை | |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | மீளளிக்கும் பிணை வைப்பு(ரூபா) | வைப்பு செல்லுபடியாகும் காலம் |
| 1 | **இலத்திரனியல் உபகரணங்கள்**<br>1. Printer-05<br>11.Desk top Computer-05<br>111.U.P.S-05<br>IV. Bar Code Printer-05 | 1.5M | NP/14/41(15)(1)/3/LDSP PT1/2022/1 | 01மாதம் | எமது சபையில் அல்லது வடக்கு மாகாண சபையில் அல்லது யாழ்.மாவட்ட செயலகத்தில் வழங்குனராக பதிவு செய்யப்பட்ட நிறுவனமாக இருத்தல் | 5000.00 | 27.05.2022 |
| 2 | Children Play Equipment (Kids Amusement park plastic playground) | 1.5M | NP/14/41(15)(1)/3/LDSP PT1/2022/2 | 01மாதம் | | 5000.00 | 27.05.2022 |

**தியாகராஜா நிரோசஷ்**
**தவிசாளர்,**
**உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு**
**வலிகாமம் கிழக்கு பிரதேசசபை, புத்தூர்.**

**26.02.2022**

### ஆளுநரின்...

யில் போராட்டத்தை முன்னெடுத்துள்ள அரசியல் கைதிகளின் விடுதலைக்கு தன்னால் முடியுமான அனைத்து முயற்சிகளை யும் மேற்கொள்ளுவதாக ஆளுநர் உறுதிமொழி வழங்கினார். இதனையடுத்தே தாம் தமது போராட்டத்தை தற்காலிகமாகக் கைவிட்டோம் என்று உறவினர்கள் தெரிவித்தனர்.

அதேவேளை, இன்று சனிக்கிழமை காலை ஆளுநரின் செய லாளருடன் அரசியல் கைதிகளின் உறவினர்கள் மற்றும் மனித உரிமைக்கும் அபிவிருத்திக்குமான நிலையத்தின் உறுப்பினர்க ளும் யாழ்ப்பாணம் சிறைச் சாலைக்கு சென்று உண்ணாவிரதப் போராட்டத்தை முன்னெடுத்துள்ள அரசியல் கைதிகளுடன் கதைப்பதற்கு சந்தர்ப்பம் பெற்றுத்தருவதாகவும் ஆளுநர் தெரி வித்துள்ளார் என்றும் அரசியல் கைதிகளின் உறவினர்கள் மேலும் தெரிவித்தனர். (ம-இ)

## சரத் வீரசேகரவின் தனிப்பட்ட பாதுகாவலர் மீது தாக்குதல்

பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் சரத் வீரசேகரவின் தனிப் பட்ட பாதுகாவலராகப் பணியாற்றும், உதவிப் பொலிஸ் அத் தியட்சகர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

மஹரகமப் பகுதியில் உள்ள அவரது வீட்டில் இந்தச் சம்ப வம் இடம்பெற்றுள்ளது. தாக்குதலை மேற்கொண்ட உதவிப் பொலிஸ் அத்தியட்சகரின் மைத்துநர் தலைமறைவாகியுள் ளார். காயமடைந்த அதிகாரி ஸ்ரீ ஜெய வர்தனபுர மருத்துவ மனையில் சேர்க்கப் பட்டுள்ளார். (ஒ-4-இ)

## தேவை

யாழ்ப்பாணத்தில் இயங்கும் ஹாட்வெயர் நிறுவனத்துக்கு வேலையாட்கள் தேவை. Store Keeper ஆண் 18 - 30 வயதுக்குட்பட்டது. யாழ்ப்பாணத்துக்குள் வசிப்பவர்கள் விரும்பத்தக்கது. (CS 43146) (3/6)

**074 174 5273/076 139 4583**

## யா/சென் மேரிஸ் வித்தியாலயம்
## (1873 - 2023)
## (150 ஆவது ஆண்டை நோக்கி)
## பழைய மாணவர் பொதுக் கூட்டம்

எமது பாடசாலைக்கான பழைய மாணவர் சங்கம் ஒன்றை உருவாக்கும் நோக்குடன் பழைய மாணவர்களுக்கான பொதுக் கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளோம்.

- **காலம் : 27.02.2022 - ஞாயிறு**
- **நேரம் : பி.ப. 4.00 மணி**

அனைவரையும் அன்புடன் அழைத்து நிற்கிறேன்.

(cs.18429) (2.6) அதிபர்

## மரண அறிவித்தல்

மலர்வு 27 . 04 . 1952



உதிர்வு 22 . 02 . 2022

### அமரர் அரசநாயகம் வசந்தகுமார்
### (கிளிமாமா)

நவாலி பிரசாத் வீதியைப் பிறப்பிடமாகவும், வசிப்பிட மாகவும் கொண்ட அமரர் அரசநாயகம் வசந்தகுமார் அவர்கள் கடந்த (22.02.2022) அன்று இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான அரசநாயகம் இரத்தி னம்மா தம்பதியினரின் அன்பு மகனும், காலஞ்சென்ற பரநிருப சிங்கம் கனகசுந்தரம் அவர்களின் பாசமிகு மருமகனும், விஜயதேவி, காலஞ்சென்ற புஸ்பராணி, வசந்தராதேவி ஆகியோ ரின் பாசமிகு சகோதரனும், காலஞ்சென்ற விக்னேஸ்வரியின் (விமலா) அன்புக் கணவரும், லவகுமார் (கனடா), திருமலர் (கொழும்பு) புவனா (கனடா) ஆகியோரின் அன்புத் தந்தையும், கவிதா (கனடா), சங்கர் (கொழும்பு), ஜெயந்தன் (கனடா) ஆகி யோரின் மாமனாரும், தனஞ்சயன், கிரண், சமரன், பாரமணி, கவிசங்கரன், சஞ்ஜீவ் சாங்கல்யா ஆகியோரின் பாசமிகு பேரனுமாவார்.


அன்னாரின் பூதவுடல் நாளை (27.02.2022) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 10.00 மணி அளவில் அன்னாரின் இல்லத் தில் இருந்து எடுத்துச் செல்லப்பட்டு கொத்துக்கட்டி இந்து மயா னத்தில் தகனக்கிரியை இடம்பெறும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.

**தொடர்புகளுக்கு**
**சங்கர் - 077 782 4000** (CS 43164) (3/6)

**தகவல்:**
**பிள்ளைகள்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இரண்டாம் ஆண்டு நினைவஞ்சலி



## சின்னப்பு செல்வரத்தினம்

தோற்றம் 1938.03.06 — மறைவு 2020.02.18

திதி : தேய்பிறை தசமி

அணையா ஒளி விளக்கே எங்கள் அப்பாவே
ஆண்டு இரண்டு கடந்து விட்ட போதிலும்
ஆறிடுமோ எங்கள் இதயம்
இறுதி வழிசென்றாலும்
இறைவன் வழி சென்றடைக
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.
ஓம் சாந்தி! ஓம் சாந்தி!! ஓம் சாந்தி!!!!

மீசாலை கிழக்கு,
மீசாலை.
077 956 9233

நினைவுகளுடன்
குடும்பத்தினர்

(CR 7940) 93/6)

# முதலாம் ஆண்டு நினைவலைகள்

அன்னை மடியில்
06 . 07 . 1943



மண்ணின் மடியில்
09 . 03 . 2021

அமரர் திருமதி

## இந்திரபூபதி செல்வரத்தினம்

பத்துத் திங்கள் எம்மைச் சுமந்து
பல நூறு அறிவுரைகள் கூறி
எங்களைக் கண்கள் போல் காத்த
எங்கள் அம்மாவே
நீங்கள் எம்மை விட்டுப்பிரிந்து
ஆண்டொன்று சென்றாலும்
எங்கள் இதயங்களிலிருந்து
உங்கள் நினைவுகள் என்றுமே நீங்காது தாயே

சித்தி விநாயகர் கோவிலடி,
நாவற்குழி மேற்கு

குடும்பத்தினர்

(CS 43168)(3/6)

# மரண அறிவித்தல்

## திருமதி பாக்கியம் கந்தையா
(உமையம்மா)



சாவகச்சேரி சரசாலை, மெய்கண்டான் வீதியைப் பிறப்பிடமாகவும் சாவகச்சேரி சங்கத்தானையை வசிப்பிடமாகவும் தற்போது பிரான்ஸில் வசித்து வந்தவருமான திருமதி கந்தையா பாக்கியம் (உமையம்மை) அவர்கள் 19.02.2022 சனிக்கிழமை பிரான்ஸில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற சிவகுரு கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான கந்தையா செல்லமுத்து தம்பதிகளின் மகளும் காலஞ்சென்றவர்களான சிவகுரு தெய்வானை தம்பதிகளின் மருமகளும் திரு.க.அருணாசலம்(கிராம்புவில்), காலஞ் சென்றவர்களான பே.காமாட்சி, ந.தங்கம்மா ஆகியோரின் அன்புச் சகோதரியும் திருமதி.அ.புனிதவதி(கிராம்புவில்), காலஞ்சென்ற-வர்களான ப.பேரம்பலம்.ப.நவரத்தினம் ஆகியோரின் மைத்துனியும் திருமதி.வி.இராஜலக்ஷ்மி (சுவிஸ்), திரு.க.சிவபாலன் (ஜேர்மனி), அமரர் கோபாலன், திரு.க.பிரபாகர் (பிரான்ஸ்) ஆகியோரின் அன்புத் தாயாரும், திரு.சு.விக்னராஜன் (உரிமையாளர், SVB Traders Burgdorf, சுவிஸ்), திருமதி.சி.வாசுகி (ஜேர்மனி), திருமதி.பி.ரேணுகா (பிரான்ஸ்) ஆகியோரின் அன்பு மாமியாரும் திரு.வி.பிருந்தன், திருமதி.பி.ஆரூண்ஜா, வி.பிரியந்தி, சி.பிரவீண், சி.பிரண்யா, பி.நிகிஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் 01.03.2022 வரை Accueil Funeraire Robaut, 265 Bd de la Madelaine, 06200 Nice இல் அஞ்சலிக்காக வைக்கப்பட்டு இறுதிக் கிரியைகள் 02.03.2022 அன்று காலை 09.00 மணிக்கு இடம்பெற்று தகனக் கிரியைகள் பி.ப 2.00 மணிக்கு Crematorium Nice Cote d'A2ur, Chemin du Roguez, RD 6202, 06670 Colomars எனும் முகவரியில் நடைபெறும்.

இதேவேளை அன்னாரின் துயர்பகிர்வும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையும் சாவகச்சேரி சங்கத்தானையில் அமைந்துள்ள அன்னாரின் இல்லத்தில் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை அன்று காலை 9.00 மணி முதல் 12.00 மணிவரை இடம்பெறும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு வேண்டிக் கொள்கின்றோம்.

தகவல்:
திருமதி இராஜலஷ்மி விக்னராஜன்
சுவிஸ் - 0041798866769

(CS 18527) (4/6)

# மரண அறிவித்தல்



## யோகேஸ்வரன் சௌமியன்

இல.39/22 மூத்த விநாயகர் வீதி, முதலாம் ஒழுங்கையை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட யோகேஸ்வரன் சௌமியன் கடந்த (21.02.2022) திங்கட்கிழமை அகால மரணமடைந்தார்.

அன்னார் யோகேஸ்வரன்– அமிர்தா (அமுதா) தம்பதியரின் பாசமிகு இளைய புதல்வனும் நவனீதாவின் அன்புக் கணவரும் கிருஷ்ணமூர்த்தி–செல்வி தம்பதியினரின் மருமகனும் காலம் சென்றவர்களான ஆறுமுகம்–பரிமழம், நடேசன்–சரோஜினி ஆகியோரின் அன்புப் பேரனும் நாகேஸ்வரி நாகலட்சுமி, யோகலட்சுமி முருகதாஸ், வேல்முருகதாஸ் ஆகியோரின் பாசமிகு மருமகனும் ஆனந்தன், காலஞ்சென்ற யோகநாதன், யோகராசா, சூரியகலா, அருணா ஆகியோரின் பெறாமகனும் சிவதா, காலஞ்சென்ற தரணிகா, சிந்துஜன், லாவண்யா, அபிராயன் ஆகியோரின் அன்புச் சகோதரனும் நிஷாந்தன், மிதுசா, பிரதீப் ஆகியோரின் மைத்துனரும் மிதுரன், விதுஷன், சகீர்தா, கிஷாணிகா ஆகியோரின் பாசமிகு மாமனும் ஆவார்.

அன்னாரின் இறுதி நிகழ்வுகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை மு.ப 10.00 மணிக்கு அவரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைகளுக்காக செம்மணி இந்து மயானத்திற்கு எடுத்து செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(CS 18530) (4/6)

| இல:39/22, மூத்தவிநாயகர் வீதி, நல்லூர்,யாழ்ப்பாணம். | தொடர்புகளுக்<br>0771504589 / 0742866368<br>யோகேஸ்வரன் / வேல்முருகதாஸ் | தகவல் குடும்பத்தினர், |
|---|---|---|

# மரண அறிவித்தல்



திருமதி

## கேதீஸ்வரன் மோகனேஸ்வரி

வேலணை மேற்கைப் பிறப்பிடமாகவும் D8 NO-40, உருத்திரபுரம் கிளிநொச்சியை வதிவிடமாகவும் கொண்ட திருமதி கேதீஸ்வரன் மோகனேஸ்வரி அவர்கள் நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை இறையடி எய்தினார்.

அன்னார் கேதீஸ்வரனின் அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான சிவப்பிரகாசம், நகுலாம்பிகை தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்றவர்களான சோமசுந்தரம், நேசமலர் ஆகியோரின் அன்பு மருமகளும், ஈஸ்வரப்பிரியா (சட்டத்தரணி-கொழும்பு), கீர்த்தனா (முன்னாள் உதவி விரிவுரையாளர், யாழ் பல்கலைக்கழகம்), (Research Assistant, Memorial University, Canada), துளசிகா (தாதியர் பயிற்றுனர்), டிலக்ஷன், டிலோஜன் ஆகியோரின் பாசமிகு தாயாரும், மகேஸ்வரநாதசர்மா (மீனாட்சி அம்மன் தேவஸ்தானம், ஜெயந்திநகர்), மாறன் (முன்னாள் கிளி.பற்றிமா பாடசாலை-விஞ்ஞான ஆசிரியர்), (கனடா), ஆகியோரின் அன்பு மாமியாரும், சிவம், அமரர் காந்தரூபன் (சுவிஸ்), நகுலேஸ்வரி (லண்டன்), Dr.ராதா (கொழும்பு தேசிய வைத்தியசாலை) ஆகியோரின் பாசமிகு சகோதரியும், சந்திராதேவி, தயாநிதி (சுவிஸ்), சிறிமுருகானந்தன் (M.A. London), ஆதித்யா (பொறியியலாளர், கொழும்பு), விக்கேஸ்வரன், நகுலேஸ்வரன் ஆகியோரின் மைத்துனியும், சிவஸ்ரீ முத்துக்குமாரசர்மா, அற்புதராணி, கணேசலிங்கம் (JP நெடுந்தீவு), விஜயாம்பிகை ஆகியோரின் சம்மந்தியும், சிறீலக்ஷ்மி (London) இன் பாசமிகு பெரிய தாயாரும், பிரதீஷா, ஆருத் (சுவிஸ்), அக்ஷயா (சுவிஸ்) ஆகியோரின் அத்தையும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நேற்று (25.02.2022) வெள்ளிக்கிழமை கிளிநொச்சியில் நடைபெற்று பூதவுடல் வவுனியாவில் தகனம் செய்யப்பட்டது. இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு தாழ்மையுடன் கேட்டுக்கொள்கிறோம்.

தகவல்:
குடும்பத்தினர்


076 963 4336

(CS 18528) (4/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மரண அறிவித்தல்

தோற்றம் 10 - 02 - 1932



மறைவு 24 - 02 - 2022

## நடராசா சிவபாக்கியம்

யாழ். மானிப்பாயைப் பிறப்பிடமாகவும் வதிவிடமாகவும் கொண்ட நடராசா சிவபாக்கியம் அவர்கள் நேற்று முன்தினம் (24.02.2022) வியாழக்கிழமை சிவபதம் அடைந்து விட்டார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னத்தம்பி, சின்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், காலஞ்சென்ற நடராசா அவர்களின் பாசமிகு துணைவியாரும், காலஞ்சென்ற செல்வரத்தினம், மகேந்திரலிங்கம், மயில்வாகனம் அவர்களின் சகோதரியும், லலிதாம்பிகை, அமிர்தாம்பிகை, சந்திரகுமார், காலஞ்சென்ற உதயகுமார் மற்றும் கமலாம்பிகை அவர்களின் தாயாரும், பரமதேவன், கனகரட்ணம், சந்திராதேவி, இராசலிங்கம் அவர்களின் பாசமிகு மாமியாரும், யுவகஜன் காலஞ்சென்ற தாட்சாயினி மற்றும் மயூரன், டக்சாயினி, டர்சினி, லக்சியா, லோஜிகா பிரவீன, சதுர்சன், சகீர்சன், வினுஜன், பவிசன், துஷாந்தினி, மேனன், ஜனார்த்தனன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும், விஷ்ணுசாயினது பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.02.2022) ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 11.00 மணியளவில் அவரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக பிப்பிலி மயானத்துக்கு எடுத்துச்செல்லப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

அல்பா மிக்சர் ஒழுங்கை,
மானிப்பாய்.

தகவல்:
குடும்பத்தினர்

(CS 43171) (3/6)

# 5ஆம் ஆண்டு நினைவஞ்சலி

தோற்றம் 22 - 09 - 1994



மறைவு 26 - 02 - 2017

## செல்வி லக்ஷனா சற்குணசீலன்

(யா/ யூனியன் கல்லூரி பழைய மாணவி)

ஆண்டுகள் ஐந்து நகர்ந்து மறைந்திடினும்
ஆறுமோ வெண்துயர் அன்பு மகளே!
மாண்டுவிடவில்லை நீங்கள் எம் மனங்களில்
மறையாது என்றும் வாழ்கின்றீர்கள்!
உங்கள் நினைவு எங்கள் நெஞ்சங்களில்
என்றும் நிலைத்து வாழும்


குருந்து வீதி,
தையிட்டி காங்கேசன்துறை.

குடும்பத்தினர்

(cs 43173 (2.6)

# மரண அறிவித்தல்

தோற்றம் 13 - 11 - 1930



மறைவு 22 - 02 - 2022

## Dr. பரமநாதன் விக்னேஷ்வரா

யாழ். கொழும்புத்துறை சுவாமியார் வீதியைப் பிறப்பிடமாகவும், யாழ் - நீராவியடி பிறவுண் வீதியை வசிப்பிடமாகவும், சுன்னாகம் புகழ் Dr. பரமநாதன் விக்னேஷ்வரா கடந்த (22.02.2022) சிட்னியில் இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் காலஞ்சென்றவர்களான பரமநாதன் தங்கரத்தினம் தம்பதியரின் அன்பு மகனும், காலஞ்சென்ற தர்மலிங்கம் மனோன்மணி தம்பதியரின் அன்பு மருமகனும், விமலாதேவியின் பாசமிகு கணவரும், அருணா, குமாரராஜன், அமுதன், ஐங்கரன், அகிலா, அரவிந்தன் ஆகியோரின் அன்புத் தந்தையும், நந்தகோபாலன், சுகன்யா, பத்மாவதி, கஜந்தி, வதனன் ஆகியோரின் மாமனாரும், துளசி, அஞ்சன், அபிஷேன், கவியரன், சாலினி, யாழினி, விஷ்வன், யதுஷன் ஆகியோரின் அன்புப் பேரனும், காலஞ்சென்ற ஆனந்தநாயகி மற்றும் திருஞானசோதி, காலஞ்சென்ற கனகேஸ்வரி- இராஜலிங்கம் ஆகியோரின் பாசமிகு சகோதரனும், ஞானாம்பிகை, சிவஞானசம்பந்தன் ஆகியோரின் மைத்துனருமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை பெப்ரவரி 27ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை Magnolia Chapel Macquarie Park Cemetery and crematorium இல் முற்பகல் 11.00 முதல் 2.00 மணி வரை நடைபெறும் என்பதை அறியத் தருகின்றோம். இந்த அறிவித்தலை

தகவல் : குடும்பத்தினர்
ஐங்கரன் : 0413459842, அரவிந்தன் : [illegible]
குமாரராஜன் : 0402874156, அமுதன் : 0420455363

# மரண அறிவித்தல்

பிறப்பு 15 . 07 . 1939



இறப்பு 15 . 02 . 2022

## கணபதிப்பிள்ளை கனகசபாபதி

(வாழைப்பழ வியாபாரி - சாவகச்சேரி)

மட்டுவில் கிழக்கு, சாவகச்சேரியைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் அச்செழு நீர்வேலியை தற்காலிக வதிவிடமாகவும் கொண்ட கணபதிப்பிள்ளை கனகசபாபதி (வாழைப்பழ வியாபாரி - சாவகச்சேரி) கடந்த (15.02.2022) காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற பூரணத்தின் (பஞ்சாமிர்தம் அம்மை) அவர்களின் அன்புக் கணவரும், காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை - வள்ளியம்மை தம்பதியரின் ஏக புத்திரனும், காலஞ்சென்ற காசிநாதர் - பார்வதிப்பிள்ளை தம்பதியரின் மூத்த மருமகனும், தவக்குமார், தவராஜி (ஆசிரியை - யா/ ஸ்ரீ சோமாஸ்கந்த கல்லூரி, புத்தூர்), தவச்செல்வி (இத்தாலி) ஆகியோரின் பாசமிகு தந்தையும், ஞானேஸ்வரி, கணேஸ்வரன் (CEB - சுன்னாகம்), ஜெயபாலன் (இத்தாலி) ஆகியோரின் மாமனாரும், கபிலன், நித்திலா, மிகுந்தன், சானுஜா, லிபர்ணா, ரக்சனா, ஜலாதீபன், ஜலானி, ஜலாஞ்சலி, ஜலாருஜன், நயனன், நர்த்தனன், நருனி ஆகியோரின் பாசமிகு பேரனும், லக்மிகா, லக்சிகா, நிலக்சன் ஆகியோரின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் கடந்த (16.02.2022) அன்று அன்னாரின் மகளது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் அச்செழு இந்து மயானத்தில் தகனம் செய்யப்பட்டது.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
பிள்ளைகள்
தவக்குமார் - 077 797 9349
தவராஜி - 077 575 9018
தவச்செல்வி - 00393 920 978015
(இத்தாலி)

(cs 43169) (2.6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உக்ரைனில்...

உக்ரைனுக்கு எதிராக நேற்றுமுன்தினம் ரஷ்ய அதிபர் புடின் இராணுவ நடவடிக்கையை அறிவித்தார். முதல் நாளான நேற்றுமுன்தினம் உக்ரைனின் வான் வழி கட்டமைப்புகள் முழுமையாக தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவரப்பட்டதாக ரஷ்ய இராணுவம் அறிவித்தது. இரண்டாம் நாளான நேற்று தரைவழித் தாக்குதலை ரஷ்யா அதிகப்படுத்தியது. இதன் தொடர்ச்சியாக தலைநகர் கீவ் ரஷ்யப் படைகளால் முற்றுகையிடப்பட்டுள்ளது. இந்த நிலையிலேயே, சரணடைவதாக உக்ரைன் அறிவித்தால் போர் நிறுத்தம் தொடர்பில் பரிசீலிக்கப்படும் என்று புடின் அறிவித்துள்ளார்.

இதற்கிடையில், வாக்குறுதியை மீறி ரஷ்யப் படைகள் குடியிருப்புப் பகுதிகளிலும் தாக்குதல் நடத்தியுள்ளன என்று உக்ரைன் அதிபர் ஜெலன்ஸ்கி குற்றஞ்சாட்டினார். 'ரஷ்யாவுக்கு நான்தான் முதல் இலக்கு. என் குடும்பம் இரண்டாவது இலக்கு. எந்தச் சூழலிலும் சரணடைய மாட்டேன். நான் கீவில் தான் இருப்பேன். என் குடும்பம் உக்ரைனில்தான் இருக்கும்' என்று அவர் தெரிவித்துள்ளார்.

**போராடுவதற்கு வருமாறு மக்களுக்கு அழைப்பு**

ரஷ்யப் படைகளுக்கு எதிராக உக்ரைன் இராணுவத்துடன் இணைந்து போராட பொதுமக்கள் முன்வர வேண்டும். உங்கள் கண்களுக்கு ரஷ்ய இராணுவத்தினர் எதிர்ப்பட்டால் பெற்றோல் குண்டுகளை வீசுங்கள் என்று உக்ரைன் பாதுகாப்பு அமைச்சு அறிவுறுத்தியுள்ளது.

கீவ் நகரின் முதன்மைத் தெருக்களிலேயே ரஷ்யப் படைகளின் நடமாட்டம் தென்படுகின்றது என்று சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன. இந்தப் பின்னணியிலேயே ரஷ்யப் படைகளை உக்ரைன் படைகளுடன் இணைந்து தாக்குமாறு பொதுமக்களை கோரியுள்ளது உக்ரைன் பாதுகாப்புத் துறை.

'பொதுமக்கள் ரஷ்ய இராணுவ நடமாட்டத்தைத் தெரிவிக்க வேண்டும். நாட்டில் இப்போது ஒவ்வொருவருமே வீரர்கள் தான். எனவே ரஷ்யப் படைகளைப் பார்த்தால் மொலடோவ் காக்டெய்ல் செய்து (பெற்றோல் குண்டு) அதைப் பற்ற வைத்து வீசி எறியுங்கள்' என்று உக்ரைன் பாதுகாப்புத் துறை மேலும் அறிவுறுத்தியுள்ளது. (அ-ம)

## ரஷ்யா...

என்று வெளிவிவகார அமைச்சின் செயலாளர் பேராசிரியர் அட்மிரல் ஜயநாத் கொலம்பகே தெரிவித்தார்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின்போது, ரஷ்ய, உக்ரைன் விவகாரம் தொடர்பில் எழுப்பப்பட்ட கேள்விக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார். இது தொடர்பில் அவர் மேலும் கூறியவை வருமாறு,

'ரஷ்யா, உக்ரைன் விவகாரத்தில் என்ன நடக்கின்றது என நாம் அவதானித்துக் கொண்டிருக்கின்றோம். பொருளாதாரத் தடைகளை விதிக்கும் அளவுக்கு எமது நாடு பொருளாதார மட்டத்தில் பலமடையவில்லை. அனைத்து நாடுகளுடனும் கொடுக்கல், வாங்கல்களில் ஈடுபடவே எதிர்பார்க்கின்றோம். ரஷ்யா, மற்றும் உக்ரைனில் இருந்தே அதிகளவு சுற்றுலாப் பயணிகள் எமது நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

எனவே, தற்போது ஏற்பட்டுள்ள போர்ச் சூழல் எமது நாட்டு பொருளாதாரத்திலும் தாக்கம் செலுத்தும். சுற்றுலாத்துறை வீழ்ச்சியடையும். 10 ஆண்டுகளுக்கு பிறகு பெரியளவில் மசகு எண்ணெய் விலை அதிகரித்துள்ளதால் அதற்கு கூடுதல் விலையை கொடுக்க நேரிடும். தேயிலை ஏற்றுமதியில் தாக்கம் ஏற்படும்.

உக்ரைனில் உள்ள இலங்கையர்கள் தொடர்பில் எகிப்தில் உள்ள தூதரகம் தொடர்பிலேயே இருக்கின்றது. வெளியேறுமாறு நாம் முன்கூட்டியே அறிவித்தோம். சிலர் வெளியேறி உள்ளனர். ஏனையோர் தொடர்பில் உள்ளனர். பெலாரஸில் உள்ள மாணவர்களின் பாதுகாப்புப் பொறுப்பை அங்குள்ள பல்கலைக்கழகம் ஏற்றுள்ளது.

தூதரகங்கள் மற்றும் ஏனைய மூலங்களில் கிடைக்கும் தகவல்கள் தொடர்பில் நாம் ஆய்வுசெய்துவருகின்றோம். பேச்சு மூலம் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டும் என்றே நாம் கருதுகின்றோம் - என்றார். (அ-ம-44)

## டிப்பர்...

பளை நகரப் பகுதியில் நேற்றுமுன்தினம் இரவு சைக்கிளில் சென்றவரை ஏ-9 வீதியில் பயணித்த டிப்பர் வாகனம் மோதிவிட்டு தப்பியோடியுள்ளது. காயமடைந்த குடும்பத் தலைவர் கிளிநொச்சி மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லும் வழியில் உயிரிழந்தார். அவருடைய சடலம் மருத்துவமனையில் வைக்கப்பட்டு பி.சி.ஆர். சோதனை முன்னெடுக்கப்பட்டது. இதன் போதே அவருக்குக் கொரோனாத் தொற்று உறுதிப்படுத்தப்பட்டது. (அ-ம-9)

## பெற்றோல்...

திலும் பெற்றோல் தட்டுப்பாட்டின் தாக்கத்தைக் காணமுடிந்தது. வவுனியாவில் எரிபொருள் நிலையங்களைச் சூழ வாகனங்கள் அணிவகுத்து நிற்பதையும், அதிகளவு தூரம் வரை எரிபொருள் நிரப்புவதற்கு மக்கள் வரிசை நீடிப்பதையும் அவதானிக்க முடிந்தது. பெரும்பாலான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மட்டுப்படுத்தப்பட்ட அளவிலான பெற்றோலே வழங்கப்படுகிறது என மக்கள் விசனம் தெரிவிக்கின்றனர். (அ-வ-213-110-56)

## ஆணின்...

சேர்ந்த இளந்திரையன் என்பவரே சடலமாக மீட்கப்பட்டவராவார்.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

பளை நகரப் பகுதிக்கு அருகாமையில் நேற்று அதிகாலை ஒருவர் வீழ்ந்து கிடப்பதை பொதுமக்கள் அவதானித்து 1990 எண்ணின் மூலமாக அவசர நோயாளர் காவுவண்டிக்குத் தகவல் கொடுத்துள்ளனர். இதையடுத்து குறித்த நபர் மீட்கப்பட்டு பளை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். அவரைப் பரிசோதித்த மருத்துவர்கள் கடந்த சில மணிநேரங்களின் முன்னரே குறித்த நபர் உயிரிழந்து விட்டார் என்பதை உறுதிப்படுத்தியுள்ளனர். மேலதிக விசாரணைகளை பளை பொலிஸார் மேற்கொண்டனர். (அ-ம-316)

## வடக்கில்...

புதன்கிழமை முதல் வடக்கு மாகாணத்தில் மழைக்குச் சாத்தியம் உள்ளது என்று தெரிவித்தார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழக புவியியல்துறையின் மூத்த விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா.

இது தொடர்பில் அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:

நாளைமறுதினம் (நாளை) ஞாயிற்றுக்கிழமை பிற்பகலுக்கு பின்னர் தென்கிழக்கு வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஒன்று உருவாக வாய்ப்புள்ளது. இதன் காரணமாக எதிர்வரும் 2ஆம் திகதி புதன் கிழமை முதல் எதிர்வரும் 5ஆம் திகதி சனிக்கிழமை வரை வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் பரவலாக மிதமான முதல் கனமான மழை கிடைக்க வாய்ப்புள்ளது.

குறிப்பாக எதிர்வரும் வியாழக்கிழமை, வெள்ளிக்கிழமை மற்றும் சனிக்கிழமை ஆகிய நாள்களில் வடக்கு மாகாணம் முழுவதும் கனமழை கிடைக்க வாய்ப்புள்ளது. இது மாதிரிகளின் அடிப்படையிலேயே கணிப்பிடப்பட்டுள்ளது. பொதுவாக இக்காலப்பகுதியில் வங்காள விரிகுடாவில் தாழமுக்கம் ஏற்படுவதில்லை. எனினும் மாதிரிகள் தாழமுக்கம் உருவாகும் சாத்தியத்தையே வெளிப்படுத்துகின்றன - என்றார். (அ-ம)

## இளவாலையில்...

வர்கள் வெளியில் சென்றிருந்தவேளை திருட்டில் ஈடுபட்டிருந்த மூவரில் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

திருட்டு நகைகளை அடகு மற்றும் விற்பனை செய்து பணம் வழங்கி உதவினர் என்ற குற்றச்சாட்டில் தந்தையும் மகளும் கைது செய்யப்பட்டுள்ளனர்.

காங்கேசன்துறை வறுத்தவிளான் பகுதியைச் சேர்ந்த 23 வயதுடைய ஒருவரே கைது செய்யப்பட்டார். அவருக்கு உதவிய குற்றச்சாட்டில் 53 வயதுடைய தந்தையும் 36 வயதுடைய மகளும் கைது செய்யப்பட்டனர்.

இளவாலை பொலிஸ் பிரிவில் அண்மைக்காலமாக பட்டப்பகலில் வீட்டில் உள்ளவர்கள் வெளியில் செல்லும் வேளையில் அவர்களின் வீடுகளை உடைத்து திருடும் சம்பவங்கள் அதிகரித்துள்ளன. அவை தொடர்பில் இளவாலை பொலிஸ் நிலையத்தில் ஏழு முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டுள்ளன. அவை தொடர்பில் காங்கேசன்துறை மூத்த பொலிஸ் அத்தியட்சகரின் கீழான மாவட்ட குற்றத்தடுப்பு பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். இதையடுத்தே மேற்படி சந்தேக நபரும் அவருக்கு உதவியவர்களும் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (அ-ம-26)

## ஒருங்கிணைப்புக்...

என்று வலியுறுத்தியும் வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் உறுப்பினர்கள் வலி தெற்கு பிரதேச செயலகம் முன்றலில் போராட்டமொன்றை முன்னெடுக்க தீர்மானித்துள்ளனர்.

வலி. தெற்கு பிரதேச சபையின் மாதாந்த அமர்வு தவிசாளர் தலைமையில் நேற்று நடைபெற்றது. இதன்போது பிரதேச அபிவிருத்திகள் தொடர்பில் ஆராயப்பட்டது. பல அபிவிருத்திகளை முன்னெடுப்பதில் மாவட்ட ஒருங்கிணைப்பு குழு இடையூறாக உள்ளது என்றும் அவர்களின் தன்னிச்சையான முடிவுகளால் மக்கள் பல அவலங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றும் அதிகளவான உறுப்பினர்களால் சுட்டிக்காட்டப்பட்டது.

குறிப்பாக வட்டாரத்துக்கு நான்கு மில்லியன் முன்மொழிவுகள் அரசியல் தலையீடு இல்லாமல் வட்டாரத்தின் பிரதிநிதிகள் ஊடாக இடம்பெற வேண்டும் என அரசாங்கம் அறிவித்துள்ள நிலையில் அது யாழ்ப்பாணத்தில் மட்டும் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் முடிவாக இருக்கக் கூடாது என்று உறுப்பினர்கள் வலியுறுத்தினர்.

இதையடுத்தே யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவுக்கும் அதன் தலைவருக்கும் எதிராக வலி தெற்கு பிரதேச செயலகம் முன்றலில் போராட்டமொன்றை மேற்கொள்ளத் தீர்மானிக்கப்பட்டது. எதிர்வரும் புதன்கிழமை இந்தக் கவனயீர்ப்பு நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்றும் யாழ்ப்பாணம் மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுவின் செயற்பாடுகள் குறித்து பிரதமரிடமும் நிதி அமைச்சரிடமும் முறையிடுவது என்றும் மேலும் தீர்மானிக்கப்பட்டது. (அ-ம-125)

## கொலைகளில்...

கொலைகளுக்கூடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லை - என்று அந்தக் கட்சி நேற்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

22 வருடங்களுக்கு முன்னர் யாழ்ப்பாணத்தில் கொல்லப்பட்ட ஊடகவியலாளர் நிமலராஜன் கொலைவழக்கில் தேடப்பட்டுவந்த பிரதான குற்றவாளி லண்டனில் பிரிட்டன் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுபிணையில்விடுவிக்கப்பட்டிருந்தார். குறித்த குற்றவாளி ஈ.பி.டி.பியின் உறுப்பினர் என்று ஊடகங்களில் வெளியான செய்திக்கே இவ்வாறு அறிக்கைமூலம் ஈ.பி.டி.பி. மறுப்பு வெளியிட்டுள்ளது. அந்த அறிக்கையில் மேலும் உள்ளதாவது:

தமிழ் மக்களுக்கு நாம் காட்டிய அரசியல் கொள்கைகளே இன்று நிதர்சனமாகியுள்ள நிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சி மீது தொடர்ச்சியாக சுமத்தப்பட்டு வரும் அவதூறுகளையும், உண்மைக்குப் புறம்பான குற்றச்சாட்டுக்களையும் நாம் கண்டிக்கின்றோம்.

அண்மையில் லண்டனில் போர்க்குற்றங்களோடு தொடர்புபட்டதாக குற்றம் சாட்டப்பட்ட கைதுகள் தொடர்பான செய்திகளை வெளியிட்ட சில ஊடகங்கள், குறித்த சம்பவத்தை ஈ.பி.டி.பியின் மக்கள் நலச் செயற்பாடுகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் வகையில் வெளியிட்டு மீண்டும் எம்மீது சேறுபூசும் கைங்கரியத்தை அரங்கேற்றி இருக்கின்றன.

ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியின் அரசியல் பணியானது, இருப்பதைப் பாதுகாத்துக் கொண்டு எமது மக்கள் பெறவேண்டியதை நடைமுறைச் சாத்தியமான பொறிமுறையூடாகவும், தேசிய நல்லிணக்கத்தின் பாதையிலும் சாதித்துப் பெற்றுக் கொள்வதேயாகும் என்பதை மூன்று தசாப்தங்களுக்கும் மேலாக வலியுறுத்தி வருவது மட்டுமல்லாது நிரூபித்தும் காட்டி வருகின்றோம்.

அதற்கான எமது ஈடுபாட்டையும், அர்ப்பணிப்பையும் பொறுத்துக் கொள்ளாத பயங்கரவாதிகளும், அவர்களின் படுகொலைகளை நியாயப்படுத்தியும், அவர்களுக்கு துதிபாடியும் பிழைப்பு நடத்தியும் வந்தவர்களால் எமது கட்சியின் பல உறுப்பினர்கள் பலிகொள்ளப்பட்டனர். பலர் நிலத்தில் வாழமுடியாத கொலை அச்சுறுத்தல் காரணமாக புலம்பெயர்ந்து போனதும் கடந்தகால கசப்பான வரலாறாகும்.

இந்தநிலையில் ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியாகிய நாம் ஒரு போதும் கொலைகளை ஏற்றுக்கொள்ளவும் இல்லை. கொலைகளுக்கூடாகப் பிரச்சினைகளைத் தீர்த்துக் கொள்ள முடியும் என்ற நம்பிக்கை கொண்டவர்களுமில்லை என்பதை தொடர்ந்தும் வலியுறுத்தி வருகின்றோம்.

இந்தநிலையில் எம்மீது பல அவதூறுகளை சுமத்தி வந்துள்ள தரப்பினர், தற்போதும் எங்கெங்கோ நடந்தேறும் சம்பவங்களை ஈழ மக்கள் ஜனநாயகக் கட்சியுடன் தொடர்புபடுத்தி விசமத்தன மான உள்நோக்கத்துடன் செய்தி பரப்புவதானது அவர்களின் அரசியல் ரீதியான உள்நோக்கம் கொண்ட செயலாகும். அத்தகைய செயற்பாடுகளை நாம் கண்டிக்கின்றோம் என்றுள்ளது. (அ-ம)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# திரவப் பால் பாவனையை ஊக்குவிக்க நடவடிக்கை



கொழும்பு,பெப்.26

**பால் பண்ணையாளர்களை மேம்படுத்துதல் மற்றும் திரவப் பால் பாவனையை ஊக்குவிக்க ஜனாதிபதி கோத்தாபய ராஜபக்ச நடவடிக்கை எடுத்துள்ளார்.**

நாரஹேன்பிட்டியில் உள்ள மில்கோ தொழிற்சாலையை நேற்று அவர் பார்வையிட்டார்.

திரவப் பால் கொள்வனவுகளில் காணப்படும் முரண்பாடுகளைத் தீர்ப்பதற்கு உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு, விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகே மற்றும் கால்நடை, பண்ணை ஊக்குவிப்பு, பால் மற்றும் முட்டைக் கைத்தொழில் இராஜாங்க அமைச்சர் டி.பி.ஹேரத் ஆகியோருக்குப் பணிப்புரை விடுத்தார். (ஒ-4,இ)

தந்தையின் சாவில் மகளுக்குச் சந்தேகம்:

## மாரடைப்பாலே உயிரிழப்பு உறுதிப்படுத்திய அறிக்கை

கொடிகாமம், பெப். 26

வெளிநாட்டில் வசிக்கும் மகள் தனது தந்தையின் இறப்பில் சந்தேகம் தெரிவித்ததை அடுத்து, சடலத்துக்கு மேற்கொண்ட உடற்கூற்றுப் பரிசோதனையில் மாரடைப்புக் காரணமாகவே உயிரிழந்தார் என்று தெரிவிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது:

மீசாலை வடக்கைச் சேர்ந்த முன்னாள் கிராம அலுவலரான 86 வயதுடைய குறித்த முதியவர் அண்மையில் உயிரிழந்தார். அவருடைய இறப்புத் தொடர்பில் வெளிநாட்டில் வாழும் மகள் சந்தேகம் தெரிவித்திருந்தார். இதையடுத்து சடலம் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் உடற்கூற்றுப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டபோதே அவர் மாரடைப்பு ஏற்பட்டதாலேயே உயிரிழந்தார் என்று உறுதிப்படுத்தப்பட்டது. (ம-159)

## பி. சி.ஆர். பரிசோதனை நல்லூரில் முன்னெடுப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

நல்லூர் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட வீதிகளில் தேவையற்று நடமாடுபவர்களுக்கும் முகக்கவசமின்றி பயணிப்போருக்கும் நல்லூரில் பி.சி.ஆர் பரிசோதனை முன்னெடுக்கப்படுகின்றது. நல்லூர் பிரதேச செயலகமும் யாழ்.மாநகர சபையின் சுகாதாரப் பிரிவினரும் இணைந்து யாழ்ப்பாண பொலிஸாரின் பாதுகாப்புடன் குறித்த பி.சி.ஆர் பரிசோதனையை முன்னெடுத்து வருகின்றனர். (ஒ-ரி1,20)

## குருதிக்கொடை முகாம்

கிளிநொச்சி,பெப். 26

பிரதேச அபிவிருத்தி வங்கி வடமாகாண ஊழியர் நலன்புரிச் சங்கத்தின் ஏற்பாட்டில், கிளிநொச்சி மாவட்ட பிரதேச அபிவிருத்தி வங்கி ஊழியர்களான தெய்வேந்திரன் பகீசன், தணிக்கசஞ்சீவ் சுமனதாச ஆகியோரின் நினைவாக குருதிக் கொடை முகாம், இன்று முற்பகல் 9 மணி தொடக்கம் பிற்பகல் 1 மணி வரை பிரதேச அபிவிருத்தி வங்கியின் யாழ்.கிளை வளாகம், கிளிநொச்சி கிளை வளாகம், வவுனியா கிளை வளாகம் ஆகியவற்றில் நடைபெறவுள்ளது. (ஒ-ரி1,113)



## இந்து மயானத்தில் புனரமைப்பு

யாழ்ப்பாணம், பெப். 26

கொழும்புத்துறை துண்டி இந்து மயானத்தில் புனரமைப்புப் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக தெரிவிக்கப்பட்டது.

பொதுமக்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளைத் தீர்க்கும் முகமாக மயான வீதியின் இருபக்கமும் புனரமைப்புப் பணிகள் நடைபெற்று வருகின்றன. குறித்த மயானத்தின் புனரமைப்புப் பணிகளை யாழ்.மாநகர சபையின் துணை முதல்வர் ஈசன் நேரில் சென்று பார்வையிட்டார். (ஒ-ரி1,20)

## பொதுக்கூட்டமும் நிர்வாகத்தெரிவும்



சாவகச்சேரி, பெப். 26

கைதடி தெற்கு சனசமூக நிலையத்தின் வருடாந்த பொதுக் கூட்டமும் நிர்வாகத்தெரிவும் அண்மையில் நிலைய மண்டபத்தில் நடைபெற்றது.

பிரதேச சனசமூக அபிவிருத்தி அலுவலர் செல்வராணி ஜெகதீசன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் தலைவராக இ.சிவகாந்தன், உப தலைவராக த.சதன், செயலாளராக இ. கந்தசாமி, உத விச் செயலாளராக வே. இராகுலன் , பொருளாளராக ஞா.லேந்தன், நிர்வாகசபை உறுப்பினர்களாக மா.மகேஸ்வரன், க.பாலசிங்கம், ச.சதர்சன், பொ.ரவீந்திரன், சி.பாஸ்க ரன், செ.மதிசிங்கம் ஆகியோர் தெரிவுசெய்யப்பட்டனர். (ஒ-ரி1,9)

**இடம் வாடகைக்கு தேவை**

யாழ் நகரில் இருந்து 6km தூரத்திற்குள் பிரதான வீதி ஒன்றில் சிறிய அலுவலகம் ஒன்றிற்கு முற்பணமில்லாமல் (1 Month Advance) இடம் வாடகைக்கு தேவை. (CS 18527) (4/6)

தொடர்பு: 076 362 2747

**வீடு வாடகைக்கு**

கச்சேரியில் யாழ். செயலகத்திற்கு ஒரு நிமிட நடை தூரத்தில் LUXURY வீடு வாடகைக்கு கொடுக்கப்படும்.

1 Bed Room, Hall, Kitchen, Toilet

077 142 2846 (CS 43149) (3/6)

**BABU TILES WORKS**
**மாபிள் பதித்தல்**



அதிக காலம் மத்திய கிழக்கு நாட்டில் மாபிள் வேலை செய்தவரால் குறுகிய காலத்தில் உங்கள் விருப்பத்திற்கு ஏற்ற வகையில் மாபிள் பதித்துத்தரப்படும்.

(cs 43135) (2.6) 077 382 4871

**மணமகள் தேவை**

1991ஆம் ஆண்டு பிறந்த உரும்பிராயைச் சேர்ந்த சுயதொழில் புரியும் வெளிநாடு செல்லவிருக்கும் மணமகனுக்கு அழகிய மணமகள் தேவை. சீதனம் எதிர்பார்க்கப்படமாட்டாது.

(CS 18447) (3/6) 074 166 9936

**வேலையாள்கள் தேவை**

மானிப்பாயை அலுவலகமாக கொண்டு இயங்கும் நிறுவனம் ஒன்றிற்கு வேலைக்கு ஆள்கள் தேவை.

- சாரதி (வயதெல்லை 18 - 25)
- விற்பனை பிரதிநிதி (ஆண் /பெண்)

075 632 8578

**வேலையாள்கள் தேவை**

யாழ்ப்பாணத்தில் இயங்கும் நிறுவனத்திற்கு வேலையாள்கள் தேவை.

- மேசன் - 2000/=
- மேசன் உதவியாளர் - 1500/=
- வெல்டர் - 1500/= - 2000/=
- வயரிங் பிளமிங் வேலை தெரிந்தவர்கள் - 1500/= - 2000/=

(cs 41390) (2.6)

075 918 3945
8.30 Am - 6.00 pm தொடர்புகொள்ளவும்

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் பலாலி வீதி, புன்னாலைகட்டுவன் சந்தியிலிருந்து நிலாவரை புத்தூர் றோட்டில் காணி 10 பரப்பு விற்பனைக்கு உண்டு. புன்னாலைக்கட்டுவன் சந்தியிலிருந்து 2 1/2 km தூரம் வாகையடி சந்தி 074 269 0854
(CS 18531) (4/6)

**PAPER CLASS**

அன்பொளி கல்வியகத்தின்

தரம் - 5 புலமைப்பரிசில் பரீட்சை– 2022 மாணவர்களுக்கான "PAPER CLASS" ஆரம்பமாகின்றன.

"விசேட வழிகாட்டல் பரீட்சைகள்" "தனித்துவமான தெளிவான நுட்பங்களுடனான விளக்கப்படுத்தல்"

"ஆசிரியர்கள்"

திரு.ப.பத்மநேசன் யா/மகாஜனாக் கல்லூரி

திரு.என்.எஸ்.தீபன் மீசாலை வீரசிங்க ஆரம்ப வித்தியாலயம்

- ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் விசேட வழிகாட்டல் பரீட்சையும், வினாத்தாள் விளக்கமளித்தலும் நடைபெறும்.
- ஆசிரியர்கள் இருவரினாலும் தயாரிக்கப்பட்ட தனித்துவமான வினாத்தாள்கள் பரீட்சைக்காக வழங்கப்படும்.
- பரீட்சைப் புள்ளிகள் வாரந்தோறும் வெளியிடப்படும்.

ஆரம்பம் 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 – 10.30.

அனுமதிகள் வழங்கப்படுகின்றன. (CS 18523) (4/6) இயக்குநர்

YARL HOSPITAL

**பணியாளர்கள் தேவை**

நியூ யாழ் வைத்தியசாலைக்கு பின்வரும் பணியாளர்கள் தேவை.

1. மருந்தக உதவியாளர்.
   சம்பளம்:- 20.000 - 50.000 வரை
2. மருந்தக பயிலுனர்
3. கணக்கு லிகிதர்
4. காசாளர்
   சம்பளம்:- 20,000க்கு மேல்
5. வரவேற்பாளர்/ பயிலுனர்
6. பயிற்சி பெற்ற தாதியர் / பயிலுனர்

அனுபவத்திற்கு ஏற்ற சம்பளம் வழங்கப்படும்.

நேர்முகத்தேர்வு- 27.02.2022 ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு

தொடர்பு : 077 310 7685, 021 222 3533

நியூ யாழ் வைத்தியசாலை, பரமேஸ்வரா சந்தி, 315, பலாலி வீதி, திருநெல்வேலி. (CR 37146) (3/6)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிகேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 26.02.2022 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.